Registered as a News Paper in.Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | தை 03 | புதன்கிழமை | (16.01.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 108

















# புதிய பிரதம நீதியரசராக பதவியேற்றார் மொஹான் பீரிஸ்

(கொழும்பு)

நாட்டின் 44 ஆவது பிரதம நீதியரசராக பீட்டர் மொஹான் பீரிஸ் நேற்று நண்பகல் உத்தியோக பூர்வமாக பதவியேற்றுள்ளார்.

மதியம் 12.37 மணிக்கு ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னர் சட்டமா அதிபராகப் பணியாற்றியதுடன் அரசின் மூத்த சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

குற்றப்பிரேரணை மூலமாக ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசராக பதவியில் இருந்து கடந்த வாரம் அகற்றப்பட்ட பின்னர் நேற்று புதிய பிரதம நீதியரசர் பதவி ஏற்றுள்ளார். நாட்டின் நீதித்துறையில் கடும் சர்ச்சையைக் கிளப்பிய ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவிநீக்க விவகாரம் நேற்றுடன் ஓரளவு முடிவுக்கு வந்தது.


எனினும் நேற்று உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. புதிதாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று மாலை உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். இதேவேளை, நீதி, நியாயத்துடன் தான் கடமையாற்றப்போவதாக புதிதாக

(19) ஆம் பக்கம் பார்க்க



## வழமைக்குத் திரும்பியது யாழ். நீதிமன்ற நடவடிக்கைகள்

வடக்கில் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நேற்று வழமைக்குத் திரும்பியது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த் நீதிமன்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பை அடுத்து நேற்று முதல் தமது நீதிமன்ற நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது. இதன்படி நேற்று நீதிமன்ற நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின. யாழ். நீதிமன்றத்தின் செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியதாகவும் யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார். (பா)



கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றைய தினம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## எனது உயிருக்கு அச்சுறுத்தல்



(கொழும்பு)

உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள் என்று பொதுமக்களிடம் கோரிக்கையிட்டுள்ள முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தான் பாரிய அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கொழும்பு 7 பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேறும் போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே கலாநிதி ஷிராணி மேற்கண்டவாறு தெரிவித்தார். நான் கடந்த 16 வருடங்களாக மக்களின் உரிமைகளை பாதுகாக்க உயர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழு மீதான வழக்குகள் வாபஸ்

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று மீளப்பெறப்பட்டன. குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை

(19) ஆம் பக்கம் பார்க்க

## புதிய பிரதம நீதியரசர் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு

### ஆணைக்குழுவில் ஜே.வி.பி. முறையீடு

புதிய பிரதம நீதியரசராக நியமனம் பெற்றுள்ள மொஹான் பீரிஸுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) நேற்று ஊழல் மோசடி முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர். அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய ஏழு கோடியே 28 இலட்சம் ரூபாவினை மோசடி செய்தார்


(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். – கொழும்பு பஸ் சேவை; குறைபாடுகளை அகற்ற ஏற்பாடு

(கொழும்பு)

யாழ். - கொழும்பு தனியார் பேருந்து சேவையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட விருக்கிறது. இதற்கான விசேட நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொளளவுள்ளார். யாழ்ப்பாணம் - கொழும்பு தனியார் பேருந்து சேவைகளின் போது தாம் எதிர்நோக்கிவரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறை செலுத்தியதுடன் அதற்கான கலந்துரையாடலை

(19) ஆம் பக்கம் பார்க்க



# வறுமையை துடைத்து ஒழிப்போம்

## ஈ.பி.டி.பி. யாழ். எம்.பி. சூளுரை

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசங்களை வறுமையற்ற பிரதேசமாக மாற்றியமைக்க வேண்டுமென ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வறுமையற்றதோர் இலங்கை தேசம் எனும் தொனிப்பொருளிலான வாழ்வின் எழுச்சி (திவிநெகும) தொடர்பிலான செயலமர்வு நேற்று கரவெட்டி மூத்த விநாயகர் திருமணமண்டபத்தில் பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் நடைபெற்ற போதே நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தால் அழிவடைந்த எமது பிரதேசத்தில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ்வருடம் வறுமையிலிருந்து எமது பிரதேசங்களை மீண்டெழச் செய்கின்ற வேலைத்திட்டங்களையே முன்னெடுக்கவுள்ளோம். வாழ்வின் எழுச்சியினை நடைமுறைப்படுத்துவதற்கு எத்தகைய தடைகளை எதிர்கொண்டோமோ அவ்வாறே இன, மத, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் இதனை செவ்வனே நடைமுறைப்படுத்துவோம்.

எனவே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அரச உத்தியோகத்தர்கள் வறுமை எங்குளதோ அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளை இனம்கண்டு செயற்படுத்த வேண்டும். எத்தகைய பாரபட்சமான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பயனாளிகளுக்கான செயலமர்வு இடம்பெற்றது.

இதேவேளை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்கான செயலமர்வு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன், கரவெட்டி கோட்டக் கல்விப்பணிப்பாளர் நற்குணலிங்கம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கால்கோள் விழா

(வடமராட்சி)

வடமராட்சி வலயத்திலுள்ள சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கால்கோள் விழாவை நடத்துமாறு வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைகள் அன்றைய நிகழ்வு அறிக்கையும், நிகழ்வினை உறுதிப்படுத்தும் வகையில் புகைப்படத்தையும் எடுத்து அனுபபுமாறும் அவர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

☆ ☆ ☆ ☆

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் - 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ர.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளருமான திருமதி சரஸ்வதி தியாகராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (109)

# பெற்றோர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மாணவர் விடுதி மீண்டும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளதால் அது தொடர்பான பெற்றோர் சந்திப்பொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எனவே பெற்றோர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் க.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

# பட்டிப் பொங்கல் விழா



(வேலணை)

பட்டிப்பொங்கல் விழாவும் கோமாதாவிற்கான பூசை வழிபாடுகளும் நேற்றுக் காலை 11.00 மணியளவில் யாழ். சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மயா மிஷனைச் சேர்ந்த வண ஜாக்நத் சைதன்யா சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த க.பாலசுப்பிரமணியக் குருக்கள் உட்பட கண்டியைச் சேர்ந்த நாக விகாராதிபதி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து தலைமையுரையினை பண்டிதர் வ.பேரின்ப நாயகம் ஆற்றினார். (05)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று நண்பகல் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இப்பாடசாலை மாணவர்கள் 480 பேருக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

இதன்போது பாடசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறை, போக்குவரத்து நெருக்கடிகள், மின்சாரம், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற குறைபாடுகள் குறித்த மகஜர் ஒன்றை அதிபர் நாமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நாமல் ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறைகளை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார்.

முன்னதாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு 10.40 மணிக்கு விஜயம் செய்து 1300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கையளித்தார். (04)

# தீயணைக்கும் கருவிகள்

## வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம்

(வடமராட்சி)

தீயினால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து வர்த்தக நிலையங்களைப் பாதுகாத்துக்கொள்ள நெல்லியடி வர்த்தக சங்கத்தினரால் தீயணைக்கும் காஸ் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் தி.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.



நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்டு பதிவுசெய்யப்பட்ட நகரமையப் பகுதிக் கடை ஒன்றும் பொதுச்சந்தை உட்புறக் கடை ஒன்றும் அண்மைக்காலத்தில் மின் ஒழுக்கு காரணமாக எரிந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான வர்த்தகப் பொருட்கள் நாசமாகின.

இவ்வாறு இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்களில் இருந்து வர்த்தக நிலையப் பொருட்களை பாதுகாத்துக் கொள்ளவே தீயணைக்கும் காஸ் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் வர்த்தகர்கள் ஆர்வம் காட்டவில்லை என கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பாக நெல்லியடி நகர மையப்பகுதியில் துஷானி கடை மின் ஒழுக்குக் காரணமாக அண்மைக் காலத்தில் முற்றாக எரிந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்குத் தேவையான மரத் தளபாடங்கள், மெத்தைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் எனப் பல எரிந்து நாசமாகியதைத் தொடர்ந்து அவ் வர்த்தக நிலைய உரிமையாளரின் ஊக்குவிப்புக்காக நகர வர்த்த கர்களின் மனமுவந்த நிதிப் பங்களிப்பில் இருந்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாவை வர்த்தக சங்கம் முன்மாதிரியாகக் கொண்டு வழங்கியிருந்தது.

இதுபோன்றதொரு துரதிஷ்டவசமான அனர்த்தம் ஏனைய வர்த்தகநிலையங்களுக்கும் ஏற்படுமாக இருந்தால் எதுவித ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்பட மாட்டாது எனவும், இதற்கு முன்னாயத்தமாக நகர வர்த்தக நிலையங்களுக்கும் தீயணைக்கும் காஸ் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படல் வேண்டுமென்ற தீர்மானம் எடுத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் வேளை அடுத்த வர்த்தகநிலையமான நெல்லியடி பொதுச்சந்தை உட்புறமுள்ள ஆஷான றேடர்ஸ் என்ற பலசரக்குக் கடை கடந்த வருட சரஸ்வதி தினத்தன்று மின் ஒழுக்குக் காரணமாகவே அதுவும் எரிந்து பல இலட்சம் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் உட்பட அன்றாட அத்தியாவசிய பொருட்கள் பல எரிந்து நாசமாகின.

ஆனாலும் அவ்வர்த்தகநிலையத்துக்கு ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் காப்புறுதி செய்தமையைக் கொண்டும் வர்த்தக சங்கத் தலைவரின் அளப்பரிய முயற்சியாலும் இழப்பீட்டுத் தொகையாக 21 இலட்சத்து 32 ஆயிரத்து 926 ரூபா காசோலை வழங்கப்பட்டமையால் இழப்பிலிருந்து மீண்டெழுந்துள்ளனர்.

எனவே மேற்படி இயற்கையானாலும் சரி செயற்கையானாலும் சரி துரதிஷ்டவசமா[illegible] அனர்த்தங்களை வர்த்தக நிலைய வர்த்தகர்கள் எதிர்கொள்ள முன்னாயத்தமாக தீயணைக்கும் காஸ் சிலிண்டர் அவசியம் எனவும் வர்த்தகநிலையத்துக்கு காப்புறுதியையும் செய்து கொள்ளுமாறு அதுவும் நம்பகத்தன்மை வாய்ந்த அரச காப்புறுதி நிறுவனத்தின் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

மேலும் நெல்லியடி நகரப் பகுதியில் மின்சார சபையின் சீரற்ற மின் விநியோகத்தினால் பல இழப்பீடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளமையால் வர்த்தக சங்கத்தினூடாக பல தரப்பினருக்கு கடிதம்மூலம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (116)



மானிப்பாய், உடுவில் பிரதேசத்தில் தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவர் அருள்ரவி தலைமையில் பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது யாழ். நாக விகாராதிபதி ஸ்ரீவிமலசேகரவும், உடுவில் இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் அமரசிங்கவும் பொங்கல் பரிசுகளை வழங்குவதையும் ஆசிரியர் மகேஸ்வரன் மாணவர்களுக்கு சிங்களம் கற்பிப்பதையும் காணலாம். (105)

# வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளை
# மக்களுக்கான சேவை வழங்குவதில் முன்னிலை

## - வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் -

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக்கிளையானது வல்வை மக்களின் ஒத்துழைப் புடனான சேவை மூலம் உலகத்தை ஒருங்கிணைக்கும் வங்கியாக பரிநாமம் சூடி நிற்கின்றது. என வங்கியின் மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே. இ.டி.சுமனசிறி தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளை தனிக்கிளையாக தரமுயர்த்தப்பட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வங்கியானது இலங்கை மக்களின் சேமிப்பின் [illegible]மான வறுமை நிலையை ஒழிக்கும் நோக்கோடு 1939 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை இலங்கை வங்கி விரிவாக்கல் கிளையாக வல்வெட்டித்துறை பிரதேச மக்களுக்கு முக்கியமாக கடற்தொழில், விவசாயம், வியாபாரம் போன்ற சுய தொழில் கடன்வசதிகளை துரித சேவை மூலமாக இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரே ஒரு நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டு இன்று அகில இலங்கை ரீதியில் இலங்கை வங்கியின் பல கிளைகளோடு ஒப்பிடுகையில் அதுவும் வல்வெட்டித்துறை பிரதேச மக்களின் பூரண ஒத்துழைப்பினாலும், பல வகையான சாதனைகளை நிலைநாட்டி வந்துள்ளது. அதனடிப்படையில் இவ்வங்கி விரிவாக்கல் கிளையாக செயற்பட்டு வந்த ஆரம்பத்திலே தனிக்கிளையாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனாலும் சக்தி வாய்ந்த மின் பிறப்பாக்கி ஏ.ரி.எம். எனும் தன்னியக்க பணப் பரிவர்த்தனை மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் போன்ற குறைபாடுகள் இருந்தமையால் தாமதம் ஏற்பட்ட போதும் வல்வெட்டித்துறை பிரதேச மக்களுக்கு துரித கதியிலான சிறந்த சேவை மூலமாக செயற்பட்டு வந்தது.


அவ் அளப்பரிய வங்கிச் சேவை வல்வை மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அந்த வகையில் வட மாகாணத்தை உங்களின் வங்கியாக விளங்கும் இலங்கை வங்கியின் சேவை மூலமாக பெரும் முன்னேற்றகரமான பிரதேசமாக துரித கதியில் உருவாக்கவும் பாமர மக்களுக்கான சேவைகள் யாவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

மேலும் வன்னிப்பிரதேசம் உட்பட வடமாகணத்தில் 19 விரிவாக்கல் கிளைகளை தனிக்கிளையாக தரமுயர்த்தி புதிய கிளைகளையும் மக்களின் தேவைகளை நன்கறிந்து எதிர்காலத்தில் கிராம மட்டத்தில் திறக்கப்பட்டு அம்மக்களுக்கான சேவைகளும், பெற்றுத் தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை வங்கி முகாமையாளர்கள், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (116)

# வற்றாது தேங்கிநிற்கும் வெள்ளநீரால் மக்கள் சிரமம்



(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு நவோதயா வீதியின் குடியிருப்புப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நீர் தொடர்ந்தும் வற்றாது இருப்பதால் அப்பகுதி மக்கள் தாம் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மழை நீர் வற்றாது தொடர்ந்து குடியிருப்புக்களை சூழ்ந்து இருப்பதனால் நீர் மூலமான நோய்கள் பரவ வாய்ப்புக் காணப்படுவதாகவும் குறிப்பாக டெங்கு, மலேரியா, தோல் நோய்கள் என்பன பரவும் அபாயநிலை காணப்படுகின்றன.

இதேவேளை அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடும் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள் என பலரும் நாளாந்தம் சிரமங்களுக்குள்ளாவதாகவும், இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இப்பிரதேசத்தில் உள்ள வடிகால் வாய்க்கால்களை சீர்செய்து குடியிருப்புகளுக்குள் தேங்கிநிற்கும் வெள்ள நீரை அகற்ற உரிய அதிகாரிகள் ஆவண செய்யுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (15)

# சாந்தை பிரதேசத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு சாந்தை பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கிடைப்பில் போடப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கென மின்சார சபையால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி அறுபத்து மூன்று மின்கம்பங்கள் நாட்டுவதற்குரிய குழிகள் வெட்டப்பட்டதுடன் அதற்குரிய மின்கம்பங்களும் இப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அறுபத்து மூன்று குழிகள் வெட்டப்பட்டபோதும் சுமார் இருபது மின்கம்பங்கள் மட்டுமே நடப்பட்டுள்ளது. அதன் பின் எந்த ஒரு பணிகளும் இடம்பெறவில்லை.

மின்சார வசதிகள் இல்லாமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிக விலைக்கு எரிபொருள் வாங்கி விளக்கு வெளிச்சத்திலேயே கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் பொருளாதார ரீதியில் கஷ்டங்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மின்சாரம் கிடைக்காததால் பல்வேறு கஷ்டங்களுடன் வாழும் எமக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர். (54)

# பொங்கல் விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தின் தைப் பொங்கல் விழா இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக முன்றலில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

# குளவி கொட்டியதால் 6 பேர் வைத்தியசாலையில்


(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாண்டியன்குளம் செல்வபுரம் கிராமத்தில் குளவி கொட்டியதில் 6 பேர் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டரை வயது குழந்தை உட்பட 6 பேருக்கு குளவி கொட்டியதால் காயம் அடைந்த இவர்களில் ஒருவர் மன்னார் வைத்தியசாலையிலும், ஏனைய 5 பேரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் உள்ள மரக்கிளையில் குளவி கூடுகட்டியிருந்த நிலையில் காற்று வீசியதை அடுத்தே மரக்கிளை முறிந்து விழுந்ததாகவும், இதனால் குளவிகள் கலைக்கப்பட்டதால் இவ்விபரீதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (140)

# யாழ்.போதனா வைத்தியசாலை ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம்




யாழ்.பேதனா வைத்தியசாலையில் அருள்மிகு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 8.06 மணி முதல் 8.32 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவ் கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அடியார்களின் எண்ணைக்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் உரும்பிராய் ஞானவைரவர ஆலய சிவஸ்ரீ செ. வைரவநாதக் குருக்கள் கும்பாபிஷேக பிரதம குருவாக கிரியைகளை ஆற்றவுள்ளார்.

இக்கும்பாபிஷேகத்திற்கான அருளுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆகியோர் வழங்கவுள்ளனர். (பா)





**தை திருநாளன்று வேலணை - துறையூர ஐயனார் சனசமூக நிலையத்தில் பொங்கல் நிகழ்வு நடைபெற்றபோது சிறுவர்கள் இணைந்து பஞ்சபுராணம் ஓதுவதையும், ஐயனார் யாட்டுக் கழகத்தால் கடந்த ஆண்டு வென்ற வெற்றிக் கிண்ணங்களும், பரிசுப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதனையும் காணலாம். (138)**

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும். - கன்ஃப்யூஷியஸ்

தினமுரசு தினப்பதிப்பு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கலாசாரம் சீரழிவது பற்றிய கவலை!

"யாழ்ப்பாணத்தில் கலாசாரம் சீரழிந்து செல்கிறது" என்பதைப் போகிறபோக்கில் சொல்லிவிட்டுப் போவது இன்று கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய அதிதீவிர சுலோகங்களில் ஒன்றாக ஆக்கப்பட்டுவிட்டதைக் காணமுடிகிறது. எந்தவித புள்ளிவிபர நிரூபிப்போ ஏனைய இடங்களுடன் – உலகமய மாற்றங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்ததாகவோ இல்லாமல் பொதுபோக்காக அந்தக் கவலையை வெளியிடுவது ஒரு தமிழ்த் தேசிய அக்கறை என்பதாகக் காட்டப்படும் ஒரு போக்கு நிலவுகிறது.

அரசாங்கத்தையும் யாழ்ப்பாணம் வந்துசெல்லும் ஏனைய சமூகத்து மக்களையும் குற்றம் சாட்டுவதாக நினைத்துக்கொண்டே பெரும்பாலோர் இந்தக் கருத்துதிர்ப்பைச் செய்கிறார்கள். சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்துபோன முன்னாள் நீதியரசர் ஒருவரும், யாழ்ப்பாண உயர்குடியினரையும் ஊடகங்களையும் மகிழ்ச்சிப்படுத்தும் என்ற முரண்நகையைத் தெரிந்துகொண்டு, இதேவகையான விஷத்தை ஏதோ சமூக அக்கறைபோல உமிழ்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

யாழ். குடாநாட்டில் திட்டமிட்ட கலாசாரச் சீரழிவு நடைபெறுவதாகவும், எமது அருமந்த இளைஞர்களும் யுவதிகளும் சீரழிந்த ஒரு வாழ்க்கைமுறைக்கு திட்டமிட்டு இழுத்துச் செல்லப்படுகிறார்கள் என்றும் இந்த மக்கள் மீதான அவரது உச்சபட்ச அக்கறையை வார்த்தைகளிலேயே விளம்பிவிட்டுப் போயிருக்கிறார்.

அத்துடன் அவரது ஆய்வு நிற்கவில்லை. 21–ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (அதாவது 2009க்கு முன்னர்) இங்கு இரவு 12 மணிக்குக்கூட பெண்பிள்ளைகள் பாதுகாப்பாக நடமாடக்கூடியதாக இருந்ததாகவும், இன்று வீட்டுக்குள் இருக்கும்போதே என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற பயத்துடனிருப்பதாகவும் உணர்ச்சிகரமாகக் கவலையை வெளியிட்ட போது, சாக்குக்குள்ளிருந்து பூனை வெளியே குதித்துவிட்டது.

அதாவது புலிகள் காலத்தில் எந்த அடக்குமுறையும் இல்லாமல் மக்கள் இங்கு ஜனநாயக சுதந்திரச் சூழலை அனுபவித்ததாக அவர் சொல்கிறார். அந்தக் காலகட்டத்தில் அவர் ஓய்வுபெற்றுவிட்ட நீதியரசர் என்பதால், அவர் ஏன் வடக்கில் வந்திருந்து சுதந்திரக்காற்றைச் சுவாசித்தபடி வாழ்ந்திருக்கவில்லை என்ற கேள்வி நமக்கு எழுகிறது.

அதுமட்டுமில்லை படித்தவர்கள், வசதி படைத்தவர்கள், தமிழ் மக்களுடன் வாழ்ந்திருந்து அவர்களுக்கு நல்லது கெட்டதைச் சொல்லியிருக்க வேண்டியவர்களெல்லாம் புலிகளின் ஆளுகைப் பிரதேசத்திற்குள் நில்லாமல் வெளியிலேயே போய் நின்றுகொண்டது ஏன் என்ற கேள்விக்கும் பதில் வேண்டும். இப்போதிருப்பதைவிட அதுதான் ஜனநாயகமும் சுதந்திரமுமான சூழ்நிலை என்றால் இங்கேயே வாழ்ந்திருந்துகொண்டு இப்போது சீரழிவுகளை எதிர்த்துப் பேசமுடிவது போல அப்போதும் பேசியிருக்கலாமே!

புலிகளின் காலத்துச் சீரழிவுகளைப் பேசவே முடியவில்லை; புலிகள் கொன்றுவிடுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு பயத்தில் வெளியேறியவர்களை விட்டுவிடலாம். ஆனால் நல்லாட்சி நடந்துகொண்டிருப்பதாக நம்பியவர்கள் வெளியே போயிருந்துவிட்டு, இப்போது இங்கே வந்து அதுவல்லவா பொற்காலம் என்று சொல்வதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்றைய யாழ்ப்பாணத்தின் சீரழிவு என்பதும் மற்றெல்லா இடங்களிலும் உள்ளதுபோல உலகமயமாக்கம் மற்றும் நுகர்வுக் கலாசாரத்தின் கட்டுக்கடங்காத வளர்ச்சி ஆகியவற்றினால் வருவது. ஒரு புள்ளிவிபரத்தின்படி சென்ற ஆண்டு சுமார் 55,000 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்து சென்றுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 5,000 டொலர்களை இலங்கையில் செலவிட்டிருந்தால், அந்தப் பணம் உண்டுபண்ணியிருக்கும் தாக்கத்தையும் நாம் புரிந்துகொள்ளலாம். அதீதமான பணப் புழக்கமும், உழைப்பின் அவசியத்தைப் பின்னுக்குத் தள்ளி, நுகர்வுக் கலாசாரத்தை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது என்பது உண்மை.

எனவே யாழ்ப்பாணத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் கலாசாரச் சீரழிவுகளின் அதிகரிப்புக்கு மற்றவர்களைக் குறை கூறுவதை விடுத்து, எம்மிடம் உள்ள குறைகளைக் களைய முயற்சிக்க வேண்டும். இவற்றை ஏற்படுத்திவிட்டதில், வர்த்தக நிறுவனங்கள், வெளிநாட்டு சக்திகள் என்போருடன், புலம்பெயர் தமிழர்களுக்கும் பெரும்பங்கு உண்டு என்பதே புரிந்துகொள்ளப்பட வேண்டும். - ஆசிரியர்

# அதிக பரசிற்றமோல் பயன்பாடு; விசாரணை நடத்த உத்தரவு

(கொழும்பு)

கடந்த ஆண்டில், இலங்கையின் சனத்தொகையை விட 40 மடங்கு' அதிகமான, பரசிற்றமோல் வில்லைகள் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. கடந்த ஆண்டில், வலி நிவாரணியான 810 மில்லியன் பரசிற்றமோல் வில்லைகள் அரசு மருத்துவமனைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் 560 மில்லியன் பரசிற்றமோல் வில்லைகளே அரசு மருத்துவமனைகள் மூலம் வழங்கப்பட்டிருந்தன. ஆண்டுதோறும் 560 தொடக்கம் 570 மில்லியன் பரசிற்றமோல் வில்லைகளே நோயாளிகளுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால் கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை சடுதியாக பெருமளவில் அதிகரித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குழுவொன்றை நியமிக்குமாறு, மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி கமால் ஜெயசிங்கவை, இலங்கையின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசென பணித்துள்ளார்.

காய்ச்சல், தலைவலி, உடல் வலி போன்ற நோய்களுக்கான பொதுவான வலி நிவாரணியாக பரசிற்றமோல் பயன்படுத்தப்படுகிறது.

எனினும், இந்த மருந்தை அதிகளவில் உட்கொள்வது உயிருக்கு ஆபத்தை ஏற்படுததக் கூடியது.

ஆறு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை இரண்டு வில்லைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற போதிலும், நோயாளிகள் நான்கு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை இரு வில்லைகளை உட்கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

இதனால் பல சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும், உடல், உள ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, கடந்த ஆண்டில் திடீரென பரசிற்றமோல் வில்லைகள் அதிகளவில் விநியோகிக்கப்பட்டதன் பின்னணியில் பெரும் மோசடி இடம் பெற்றுள்ளதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

பல அரசு மருத்துவமனைகளில் உள்ள பணியாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை தனியார் மருந்தகங்களுக்கு விற்பனை செய்வதாகவும், எனவே, இதுகுறித்து முழு விசாரணை நடத்துமாறும் சுகாதார அமைச்சர் பணித்துள்ளார்.

# மிதக்கும் ஆயுதக் களஞ்சியம்; இலங்கை - பிரிட்டன் பேச்சு

(கொழும்பு)

இலங்கை அரசு மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தைப் பயன்படுத்துவது குறித்து இலங்கையுடன் பிரிட்டன் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருவதாக "கார்டியன்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை பாதுகாப்பு அமைச்சின் துணை நிறுவனமான "அவன்ற் கார்டே மரிரைம் சேவிசஸ" நிறுவனம், மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்களை வைத்துள்ளது.

தமது நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக்களஞ்சிய கப்பல்களில் ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் இருப்பதாக மேற்படி நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனம் ஆயுதங்களை பாதுகாப்பதற்கு ஒரு நாளைக்கு 25 டொலர்களைக் கட்டணமாக அறவிடுகிறது.

மாதம் ஒன்றுக்கு 800 தொடக்கம் 1000 வரையான கப்பல்கள் இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை பயன்படுத்தி வருகின்றன.

மேற்படி மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களைப் பயன்படுத்துவது குறித்து தாமும் பேச்சு நடத்தி வருவதாக, பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகம் கார்டியனிடம் தெரிவித்துள்ளது.

# பொதுமக்களின் அனுமதியின்றி நிலங்களை துண்டாடக்கூடாது

மட்டக்களப்பு, வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து கோரளைப்பற்று மத்தி மற்றும் கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுடன் இணைக்கப்படும் பிரதேசங்கள் தொடர்பான தீர்மானம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். இதனை த.தே.கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட ஓமடியாமடு, கேணிநகர், ஆலங்குளம், புனானை மற்றும் பாரதிபுரம் ஆகிய 47.7 கி.மீ பரப்புடைய கிராம சேவையாளர் பிரிவுகளையும் கிரான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வாகனேரி கிராம சேவையாளர் பிரிவையும் கோரளைப்பற்று மத்தி ஓட்டமாவடியுடன் இணைப்பதற்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தலைமையில் மட்டு. மாவட்ட செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் ஒரு ஆரம்ப கட்டம் தான். இது சம்பந்தமாக எதிர்வரும் காலங்களில் வ[illegible]திப்போம் எனத் தெரிவித்திருந்தனர். ஆனால் இது சம்பந்தமான இறுதிமுடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். பொதுநிர்வாக அமைச்சின் இந்த முடிவை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சம்பந்தப்பட்ட பிரதேச மக்களினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் ஆலோசனைகளையும், அனுமதியையும் பெறாமல் மேற்கொள்ளப்படும் இந்தக் காணி நிர்வாகத் துண்டாடல் சம்பவங்களை தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றார்.

# பதவியை ஏற்க மறுப்பு

(கொழும்பு)

ஹேலிஸ் எம்ஜிடி நிற்றிங் மில்ஸ் தனியார் கம்பனியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் பதவியை ஏற்க மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் புதல்வரான சதுர வி. கப்ரால் மறுத்துள்ளார் என பங்குச் சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசம்பர் முதலாம் திகதி முதல் ஹேலிஸ் எம்ஜிடி நிற்றிங் மில்ஸ் தனியார் கம்பனியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக சதுர வி. கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார் என கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அறிவிக்கப்பட்டது.

எனினும் இந்தக் கம்பனியின் பணிப்பாளர் பதவியை ஏற்கும் நிலையில் தற்போது தான் இல்லை என சதுர வி.கப்ரால் அறிவித்துள்ளதாக கொழும்பு பங்குச்சந்தை தகவல்கள் தெரிவித்தன.

இயந்திர பொறியியலில் உற்பத்தி மற்றும் வடிமைப்பு துறையில் சதுர வி.கப்ரல் பட்டம் பெற்றுள்ளமை குறிப்பிட்டத்தக்கது. கப்ரால் இவ்வாறு அறிவித்துள்ளமையினால் அவரது பணிப்பாளர் சபைக்கான நியமனம் வலுவற்றதாகிவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க டொலர்களுடன் ரஷ்யப் பிரஜை கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த ரஷ்யப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நீர்கொழும்பு, எக்குகால பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா வந்திருந்த நபர் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து போலி அமெரிக்க டொலர்கள் ஏழு கைப்பற்றப்பட்டுள்ளன.

# சிறிதரனின் அலுவலகச் சோதனையும், ஊ(ட)கக்காரரின் திருவிளையாடல்களும்

கே. ருஷாங்கன்

**சம்பவ இடத்தில் நேரடியாகச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்களை இலக்கு வைத்த தாக்குதல்களின் மூலம், நடைபெற்ற விடயத்தின் மீதான கவனத்தை திசைதிருப்பி இதுவும் ஒரு தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சதி முயற்சி என்ற விதமாக உடனடியாகவே ஊ(ட)க அரசியல் நடத்தப்பட்டுவிட்டது.**

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அலுவலகத்திலிருந்து வெடி பொருள்கள், ஆபாசப்பட சீடி, உள்ளூர் .பெண்கள் சிலரின் படங்கள், ஆணுறைகள் என்பன கைப்பற்றப்பட்டமை ஒரு திட்டமிட்ட நாடகம் என்றும், இதில் ஊடகவியலாளர்கள் சிலரும், கிளிநொச்சி மாவட்ட போட்டி பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் வழக்கம்போல தமிழ் இணையங்கள் சிலவும், யாழ். பத்திரிகைகளும் ஊ(ட)கச் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

சிறிதரனின் அலுவலகத்தில் தேடுதல் நடத்தப்பட்டது தவறானது, தேடுதலின்போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வெடிமருந்துகள் முதற்கொண்டு, ஆபாச சிடிக்கள், ஆணுறைகள், பெண்களின் படங்கள் என அனைத்துமே தேடுதல்நடத்தியவர்களால் கொண்டுவந்து வைக்கப்பட்டு வேண்டுமென்றே சோடிக்கப்பட்டிருக்கிறது என்றவிதமாக, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனோ அல்லது அலுவலகத்தில் இருந்தவர்களோ எதுவும் கூற முன்னராகவே இந்த ஊ(ட)கங்கள் சொல்லி விட்டன.

சம்பவ இடத்தில் நேரடியாகச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்களை இலக்கு வைத்த தாக்குதல்களின் மூலம், நடைபெற்ற விடயத்தின் மீதான கவனத்தை திசைதிருப்பி இதுவும் ஒரு தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சதி முயற்சி என்ற விதமாக உடனடியாகவே ஊ(ட)க அரசியல் நடத்தப்பட்டுவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக களத்திலிருந்து செய்தியாளர்கள் செய்திகளைச் சேகரித்து வெளியிடுவதற்கு முன்னதாகவே, பிரித்தானியாவிலிருந்து நடத்தப்படும் இணையமொன்று, சிறிதரனின் அலுவலகத்தில் (அது அவருடைய பத்திரிகை அலுவலகம் என்று வேறு குறிப்பிட்டு) திட்டமிட்டு சோதனை நடத்தப்பட்டதாகச் செய்தி வெளியிட்டு, செய்தியின் முக்கியத்துவத்தைவிட, செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் பற்றிய சந்தேகங்களையும், அவர்கள் மீதான அவதூறுக் குற்றச்சாட்டுக்களையும் அவசர அவசரமாக வெளியிட்டு வைத்தது.

செய்தியைவிட, செய்தியாளர்கள் எப்படி அந்தச் செய்தியைச் சேகரிக்க அங்கே சென்றார்கள் என்ற சந்தேகத்தையே பிரித்தானியாவிலிருந்து இயங்கும் அந்த இணையத்தளம் முக்கியத்துவப்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து செயற்படும் ஒரு ஊடகவியலாளர் எப்படி கிளிநொச்சியில் சிறிதரனின் அலுவலகத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சோதனை நடத்தும்போது அங்கே நின்றார்? என்பதுதான் இந்த இணையத்தளத்தினதும், தொடர்ந்து இதுபற்றி எழுதிய ஏனைய சில இணையத்தளங்களினதும் பிரதான சந்தேகமாக இருந்தது - இருக்கிறது.

## யாழ். ஊடகவியலாளர் எப்படி அங்கே சென்றார்?

இது இந்த இணையத்தளக்காரரின் மண்டையைப்பிக்கும் மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கிறது. அட, ஒரு சம்பவம் தொடர்பான செய்தி குறித்த தகவல் ஒரு ஊடகவியலாளருக்குக் கிடைப்பதற்கு ஆயிரம் வழிகள் இருக்கலாம். அவ்வாறு ஒரு செய்தி குறித்த தகவலை முன்கூட்டியே வேகமாகப் பெற்றுக்கொள்வதில்தான ஒரு செய்தியாளரின் திறமையே தங்கியிருக்கிறது. ஒரு செய்தியாளருக்கு இருக்கக்கூடிய தொடர்பு வலைப்பின்னலின் பலத்தைப் பொறுத்து அவருக்குச் செய்திகள் அதிவேகமாகக் கிடைக்க வாய்ப்புக்கள் உண்டு.

சிறிதரனின் அலுவலகத்தில் தேடுதல் நடத்தப்படுவது தொடர்பான தகவல் கிடைத்து அங்கே வசந்தம் தொலைக்காட்சி, உதயன், தினமுரசு ஆகியவற்றின் செய்தியாளர்களுடன், மேற்படி இவர்கள் குறிப்பிடும் யாழ். ஊடகவியலாளரும் அங்கு சென்றிருந்தார். இவர்கள் தமது ஊ(ட)கச் செய்தியில் குறிப்பிடுவது போல ஒரேயொரு ஊடகவியலாளரை வைத்து நடத்தப்பட்ட தேடுதல் என்பது, அங்கு என்ன நடந்தது என்பதை அறியாத பேதைமைத்தனமே தவிர வேறொன்றுமில்லை.


களத்திற்கு நேரில் சென்று செய்தி சேகரித்தல் என்ற ஊடகவியல் விதிமுறைக்கு மாறாக, எங் கெங்கோ தூர தேசங்களிலிருந்துகொண்டு இங்கேஎன்ன நடைபெறுகிறது என்பதை வெறும் ஊகங்களாகச் செய்தியாக வெளியிட்டு வியாபாரம் நடத்துபவர்களுக்கு, களச் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றியும், களத்தில் என்ன நடந்தது என்பது பற்றியும் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

சிறிதரனின் அலுவலகத்தில் மாலை 3 மணி முதல் 8 மணி வரையில் சோதனை நடைபெற்றதாக இவர்களே தமது செய்திகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையிலான சுமார் 65 கிலோமீற்றர் தூரத்தை அதிக பட்சம் ஒரு மணிநேரத்தில் கடக்கக்கூடியதாக ஏ-9 வீதி திருத்தப்பட்டுவிட்ட நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு ஊடகவியலாளர் சம்பவ இடத்துக்கு வந்ததில் அப்படி என்ன தலையைப்பிக்கும் அளவு பிரச்சினை இருக்கிறது?

இன்னும் ஒருவேளை, இவர்கள் குறிப்பிடும் அந்த யாழ்ப்பாணச் செய்தியாளர், அவரது சொந்தப் பணிகள் நிமித்தம் கிளிநொச்சிக்கு வந்திருக்கலாம் என்ற சாத்தியப்பாடு குறித்தும் விரிவாகச் சிந்திக்கும் அளவுக்கு, ஆழமான ஊடகவியலுக்குப் பழக்கப்படாத மூளை, முன்கூட்டியே தமது மனதில் ஏற்படுத்திவைத்திருக்கும் விம்பங்களின் அடிப்படையில் ஒரு ஊகத்தைச் செய்து அதையே எழுதித் தொலைத்துவிட்டது.

இவர்கள் சொன்ன அந்தச் செய்தியாளர் தன்னுடைய நிறுவனத்தின் கல்வி-தொழில் வழிகாட்டல் பணி நிமித்தம் தமது சக பணியாளர்களுடன் அன்று காலை தமது வாகனத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்றிருக்கிறார். வவுனியாவில் அவரது நிறுவனம் கல்வி-தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்துவது ஒன்றும் சிதம்பர இரகசியமும் இல்லை.

வவுனியாவில் பணி முடித்து யாழ்ப்பாணம் திரும்பும் வழியில், கிளிநொச்சி உதயநகர் கிழக்கு மாதர் சங்கக் கூட்டத்தில் கல்வி-தொழில் வழிகாட்டல் கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்தவேளை, சுமார் 5.30 மணியளவில் கிளிநொச்சியில் சிறிதரனின் அலுவலகத்தில் சோதனை ஒன்று நடத்தப்படுவது தொடர்பான கொழும்பு இணையத்தளச் செய்தியொன்றைப் பார்த்த நண்பரின் தொலைபேசி அழைப்பு மூலம்




அதை அறிந்துகொண்ட அவர், ஓர் ஊடகவியலாளர் என்ற வகையில் உடனடியாகவே சம்பவ இடத்துக்குச் சென்றார். அவர் அங்கு சென்றபோது ஏற்கனவே அங்கு வசந்தம் தொலைக்காட்சி செய்தியாளர் உட்பட ஒரு சில செய்தியாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆக, இந்த இணையத்தள ஊ(ட)கச் செய்திகள் கூறுவது போல, முன்கூட்டியே இந்தச்சோதனை நடவடிக்கை குறித்து அறிந்துகொண்டு அந்தச் செய்தியாளர் சம்பவ இடத்துக்குச் சென்றார் என்பதும், அவர் மட்டுமே அங்கு செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டார் என்பதும், களத்தில் என்ன நடந்தது என்று தெரியாத ஊக நிலை அல்லது, தெரிந்தும் உள்ளதை மறைத்து தாங்கள் விரும்பியதைச் செய்தியாக்கி மக்களை ஏமாற்றும் வழமையாக ஊ(ட)க வியாபாரத் தந்திரமேயன்றி வேறொன்றுமில்லை.

மற்றுமொரு சுவிஸ் இணைய ஊ(ட)கம் சொல்வது போன்று இந்தச் செய்தியாளர் சோதனை ஆரம்பித்த 3 மணிக்கே அங்கு சென்றுவிட்டார் என்பதும், அவர்தான் முதலாவதாக அங்கே சென்றார் என்பதும்கூட அடிப்படையற்ற தகவல். குறைந்தபட்சம் சிறிதரனின் அலுவலகத்தில் சோதனை நடத்தும்போது அங்கே இருந்து, ஊடகவியலாளர்களிடம் ஆபாசப்பட வீடியோக்களையும், பெண்களின் ஒளிப்படங்களையும், ஆணுறைகளையும் காண்பித்த, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ஊடகச் செயலாளர் என்று சொல்லப்படும் பொன்னம்பலம் லக்சுமிகாந்தனை(பொன்காந்தன்)க் கேட்டாலே,அங்கே எந்தெந்தச் செய்தியாளர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

உண்மையில் இங்கே பிரச்சினை சிறிதரனின் அலுவலகத்தில் வெடிபொருள், ஆபாசப்பட வீடியோ உள்ளிட்ட பொருள்கள் இருந்ததோ, படையினர் அங்கு சோதனை நடத்தியதோகூட இல்லை. அலுவலகத்திலிருந்த பணியாளர் கைதுசெய்யப்பட்டிருப்பதால், சட்டத்தின் முன் அவர் நிறுத்தப்படும்போது உண்மை நிலையை பாதுகாப்புத் தரப்பு வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

(17ஆம் பக்கம் பார்க்க)



# சர்வதேச விமர்சனங்களை நுட்ப ரீதியாக எதிர்கொள்வோம்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை சர்வதேசம் விமர்சிப்பது இது முதற்தடவையல்ல. அத்துடன் இது எமக்கு பாரியவிடயமும் அல்ல. குற்றப்பிரேரணை விடயத்தில் வருகின்ற சர்வதேச விமர்சனங்களை நாங்கள் நுட்பரீதியாக எதிர்கொள்வோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் வெளியிடப்படும் கருத்துக்கள் குறித்து விபரித்த போதே அவர் இவ்வாறு தெரிவித துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் குழியொன்றை வெட்டினாலும் சர்வதேசம் விமர்சிக்கும். பிரபாகரனை தோற்கடிக்க முற்பட்டபோதும் இவ்வாறே சர்வதேசம் விமர்சித்தது. ஆனால் நாங்கள் பிரபாகரனை தோற்கடித்து மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்தோம். அது போன்றே இந்த நிலைமையையும் சமாளிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து விடயங்களையும் சர்வதேசம் விமர்சித்தே வந்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த மெனிக்பாம் முகாமில் மின்சாரம் தடைப்பட்டாலும் இந்த சர்வதேசம் விமர்சித்தது.



எமது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் குற்றப்பிரேரணை செயற்பாடு என்பனவற்றை புரிந்து கொண்டால் சர்வதேச சமூகம் விமர்சனங்களை முன்வைக்காது.

தற்போது எமது நாட்டின் அரசியல்வாதிகள் கூறும் விடயங்களை வைத்துக்கொண்டே சர்வதேச சமூகம் கருத்துக்களை வெளியிடுகின்றது. உண்மை நிலைமையை புரிந்து கொண்டால் சர்வதேச சமூகம் இவ்வாறு கருத்து வெளியிடாது.

அமெரிக்கா போன்ற நாடுகள் எமது செயற்பாட்டை விமர்சிப்பது புதிய விடயமல்ல. பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு விமர்சனம் செய்யப்பட்டது. உண்மை நிலைமையை விளக்குவதன் மூலம் இதனை சமாளிக்க முடியுமென்றார்.

# 25 வயதுக்கு குறைந்தவர்கள் பணிப்பெண்களாகச் செல்லத்தடை

(கொழும்பு)



25 வயதுக்கும் குறைந்தவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப்பெற்றுச் செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களின் குறைந்தபட்ச வயது 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் தொழில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் போது சஹரிய சட்டங்கள் மற்றும் இலங்கை சட்டங்கள் கருத்திற்கொள்ளப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். உடன்படிக்கைகளின் போது தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்யக் கூடிய வகையிலான நிபந்தனைகள் உள்ளடக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக் என்ற பெண்ணுக்கு அண்மையில் சவுதி அரேபியாவில் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசியலமைப்பின் பிரகாரம் புதிய நீதியரசரை வரவேற்கிறோம்



(கொழும்பு)

குற்றப்பிரேரணை அறிக்கை மீதான வாக்கெடுப்பிலிருந்து நாங்கள் வெளி யேறிய போதிலும் புதிதாக நியமிக்கப்படும் நீதியரசரை நாம் வரவேற்போம் என்று லங்கா சமசமாஜ கட்சியின் உறுப்பினரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலையியற் கட்டளைகளை திருத்துதல் மற்றும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர்களை நியமிக்கவேண்டும் என்று எம்மால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கு மறுப்பு தெரிவித்ததை அடுத்தே நாம் குற்றப்பிரேரணை வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தோம்.

அரசியலமைப்பின் பிரகாரம் நீதியரசர் ஒருவரை நியமிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதன்பிரகாரம் நியமிக்கப்படும் புதிய நீதியரசரை நாம் வரவேற்போம் என்றார்.

# இலங்கைப் பணிப்பெண் மீது சவுதி அரேபியாவில் தாக்குதல்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்ணொருவர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்ததைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு, புளூமென்டல் வீதியைச் சேர்ந்த அங்கஸ் பெரேரா (வயது 30) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான இப்பெண் காயமடைந்த நிலையில் வீதியில் வீசப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்தே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் பணிப்பெண்ணாக சவுதி அரேபியாவுக்குச் சென்ற இப்பெண், அவரது முதலாளியினால் இரக்கமின்றி தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது இடது கையில் 5 வெட்டுக் காயங்களும் வலது கையில் எரிகாயங்களும் காணப்படுகின்றன. அத்துடன், தனது தலையில் ஆடைகளைக் கழுவும் இரசாயன பதார்த்தம் போடப்பட்டதாகவும் தாக்குதலினால் தான் பாதிக்கப்பட்டதாகவும் இப் பெண் கூறியுள்ளார்.

# எமி இலக்கங்களை இனங்காண புதிய இலத்திரனியல் முறைமை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் எமி இலக்கங்களை இனங்காண்பதற்கான புதிய இலத்திரனியல் முறைமையொன்றை அறிமுகப்படுத்த தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுததும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பதிவுசெய்யப்படாத கையடக்கத் தொலைபேசிகளை புதிய திட்டத்தின் கீழ் தன்னியக்கமாக செயலிழக்கச் செய்ய முடியும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷபெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

எமி இலக்கங்களை கணனிமயப்படுத்தும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக ஏற்கனவே விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

E.I.R என்றழைக்கப்படுகின்ற புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு சிறிது காலத்தில் பதிவு செய்யப்படாத எமி இலக்கங்களுடைய கையடக்கத் தொலைபேசிகளை துண்டிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது வருடாந்தம் சுமார் ஐந்து தொடக்கம் ஆறு மில்லியன் கையடக்கத் தொலைபேசிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதில் சுமார் 50 வீதமானவை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத தரம் குறைந்த கையடக்கத் தொலைபேசிகள் என்பது தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்ற அனைத்து கையடக்கத் தொலைபேசிகளினதும் எமி இலக்கங்கள் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவில் பதிவுசெய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 11 வழக்குகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று செவ்வாய்கிழமை விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்படவிருந்த 11 வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நீதியரசர்களான இமாம் மற்றும் பீ.ஏ ரத்னாயக்க மட்டுமே நீதிமன்றத்திற்கு சமூகமளித்திருந்தனர். பிரதம நீதியரசரின் ஆசனம் வெறிச்சோடி இருந்தது இதனால் வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டன.

# சவுதி அரேபியாவிற்கு எதிராக செயற்பட அழைப்பு·

(கொழும்பு)

இலங்கையின் பணிப்பெண் ரிசானா நபீக்குக்கு மரண தண்டனை நிறைவேற்றிய சவுதி அரேபியாவுக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் யோசனை முன்வைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

சர்வதேசத்தின் இந்த கோரிக்கைக்கு இலங்கையும் தமது ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என்று ஏசியன் ரிபீயுன் இணையத்தளம் கோரியுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 25 முதல மார்ச் 22 வரை மனித உரிமைகள் சபையின் 22 ஆவது அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது சவுதி அரேபியாவின் மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக சர்வதேசம் தீவிரமாக செயற்படவேண்டும் என்றும் ஏசியன் ரிபியூன் கோரியுள்ளது

# விசேட பரீட்சைக்கான விண்ணப்ப திகதி பூர்த்தி

(கொழும்பு)

விசேட சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

மழையினால் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது போன மாணவர்களுக்காக நடத்தப்படும் விசேட பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பம் பத்திரிகையிலும், பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பம் அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் W.M.N.J.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

மழையினால் கடந்த டிசம்பர் மாதம் 17,18,19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெற்ற பரீட்சைகளில் தோற்றமுடியாது போன மாணவர்களுக்கான விசேட பரீட்சைகளை அடுத்த மாதம் 9,10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முடிந்தளவு மக்களுக்கு சேவையாற்றவேண்டும்

(கொழும்பு)

தூற்றுதலுக்கு உள்ளாக வேண்டுமாயின் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஹோமாகம பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அரசியல் வாதிகள் செயற்படவேண்டிய விதம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தூற்றுதலுக்கு உள்ளாக வேண்டுமாயின் முடிந்தளவு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என அநாகரிக தர்மபால எமக்கு கற்பித்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

# காலை வேளையில் கடும் குளிர் நிலவும்

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் சில தினங்களுக்கு காலை வேளையில் கடும் குளிருடனான வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நேற்றுக் காலை கொழும்பின் வெப்பநிலை 22.3 செல்சியஸாக குறைந்துள்ளதாக திணைக்களத்தின் கடமைநேர வானிலை அதிகாரி தெரிவித்தார்.

நுவரெலியா, ஹட்டன் பகுதிகளில் வெப்பநிலை 10 செல்சியஸாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நண்பகல் வேளைகளில் கடும் வெயில் காணப்படும் எனவும், மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இல்லை எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு அரசு முக்கியத்துவம் வழங்குகிறது

### - புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர்



(முல்லைத்தீவு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பொருளாதார சுவீட்சத்தைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது அரசாங்கத்தின் இந்த முயற்சியில் புனர்வாழ்வு பெற்ற அனைவரும் பங்களிப்பு வழங்கும் போது இதன் பூரணத்துவத்தை உணரமுடியும் தேவையற்ற குழப்பங்களுக்கும் தீய எண்ணங்களுக்கும் இடம் கொடுக்காமல் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு உங்கள் வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக் கருத்தில் கொண்டு வாழவேண்டும் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு பெற்ற மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றது புனர்வாழ்வு பெற்றவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடந்த வருடம் 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது இவ்வருடம் அத்தொகை அதிகரிக்கப்பட்டு 500 மில்லியாக உயர்த்தப்பட்டுள்ளது. புனர்வாழ்வு பெற்றவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கமும் எமது அமைச்சும் கூடிய கரிசணையுடன் செயற்பட்டு வருகின்றது. இதற்காக பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

அத்துடன் வடக்கில் வெடிச்சத்தங்களும் குண்டுச் சத்தங்களும் கேட்ட இடத்தில் இன்று பட்டாசுகள் கொழுத்தி விழாக்களைக் கொண்டாடும் நிலை மாற்றப்பட்டுள்ளது இந்த சமாதான சூழலை குழப்புவதற்கு· சில தீயசக்திகள் முயற்சித்து வருவதோடு இதனை விமர்சித்தும் வரு கின்றது இந்த சக்திகளின் சதியில் இருந்து எல்லோரும் விடுபட்டு ஒரு நாட்டு மக்கள் என்ற சிந்தனையுடன் செயற்பட்டால் எல்லோருடைய எதிர்கால வாழ்வு சிறந்ததாக அமையும் என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார். (02)

# தற்காலிக பயணிகள் தரிப்பிடம் பயன்படுத்த முடியாது அசௌகரியம்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச சபையினால் நெல்லியடி நகர்ப்பகுதியில் பயணிகள் தங்கிநின்று போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட தரிப்பிடம் பயன்படுத்த முடியாத அளவுக்கு சீரற்றதாகக் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இவ்விடத்தில் இருந்த பயணிகள் தங்குமிடக் கட்டடத்தை வீதி அகலிப்புக்காக அகற்றப்பட்டதுடன் இதற்குப் பதிலாக தகரங்களால் கம்பிகள் கொண்டு கட்டப்பட்ட தற்காலிக கொட்டகையாக பருத்தித்துறை யாழ்.வீதி ஓரத்தில் அமைக்கப் பட்டுள்ளதுடன் இக்கொட்டகை பகல் வேளைகளில் வாகனத் தரிப்பிடமாகவும் இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகளின் இருப்பிடமாகவும் பயன்படுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னர் இவ்விடத்தில் மலசல கூடம் கட்டுவதெனவும், தெற்குப் பக்கமாக உள்ள ஆட்டோ தரிப்பிடத்தில் பயணிகள் தற்குமிடக்கட்டடம் கட்டுவது என பிரதேச சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

நெல்லியடி நகர மையப்பகுதியை நவீனமயப்படுத்தும் திட்டத்தையும் கடந்த பல மாதங்களுக்கு முன்னர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் நெல்லியடி நகர அபிவிருத்திக்கு நகர வர்த்தகர்களின் பங்களிப்பு நிதியிலிருந்தே மின்குமிழ் பொருத்துதல், தீயணைக்கும் சாதனங்கள், வறுமைக் கோட்டில் வாழும் மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கல் போன்றன செயற்படுவதாகவும், நகரத்தின் வீதி அகலிப்பு கூட வர்த்தக சங்கமே முன்னின்று நடத்துவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (116)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார்.

அலுவலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளுடன் ஓய்வு பெற்றுச்சென்ற, இடமாற்றலாகிச்சென்ற உத்தியோகத்தர்களின் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. (90)



# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ்
## 2ஆவது சுற்றில் முன்னணி வீரர்கள்




(மெல்போர்ன்)
அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்று முன்னணி வீரர்களான செரீனா, ஜோகோவிச், முர்ரே உள்ளிட்ட முன்னணி வீரர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான, அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகின்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரான்சின் பால்-ஹென்றி மாத்யூவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-2, 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிச், அமெரிக்காவின் மைக்கல் ரசலை எதிர்கொண்டார். இதில் பெர்டிச் 6-3, 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.


பெண்கள் ஒற்றைய பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், ருமேனியா வீராங்கனை எடினாவை எதிர்கொண்டார். இதில் 6-0, 6-0 என்ற நேர் செட்கணக்கில் எடினாவை செரீனா வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல் முதல் சுற்றில் அஸாரிங்கா, நடியா பெட்ரோவா, கரோலின் வோஸ்னியாக்கி ஆகியோர் முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.



அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டமொன்றில் ஜப்பானைச் சேர்ந்த 42 வயதான கிமிகோ டேட் குரும் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். ஜப்பானைச் சேர்ந்த ஒரு வீராங்கனை 42 வயதில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சமநிலை



(விஜ் ஆன் ஜீ)
டாடா ஸ்டீல் சதுரங்கத் தொடரின் 2ஆவது சுற்றுப் போட்டியை, உலக சம்பியன் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமநிலை செய்தார்.

நெதர்லாந்தில் உள்ள விஜ் ஆன் ஜீ நகரில், 75ஆவது டாடா ஸ்டீல் செஸ் தொடர் நடக்கிறது. இதில் நோர்வேயின் கார்ல்சன், ஆர்மேனியாவின் ஆரோனியன் உள்ளிட்ட 42 முன்னணி வீரர்கள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றனர்.

'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், தனது முதல் சுற்று ஆட்டத்தை சமநிலை செய்தார். இரண்டாவது சுற்றில் நெதர்லாந்தின் அனிஷ் கிரியை சந்தித்த ஆனந்த், கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். இப்போட்டி 46ஆவது நகர்த்தலின் போது சமநிலையானது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் பென்டலா ஹரிகிருஷ்ணா, இத்தாலியின் பேபியானோ காருயனாவை எதிர்கொண்டார். இதில் ஹரிகிருஷ்ணா கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். இப்போட்டி 51ஆவது நகர்த்தலின் போது சமநிலையானது.

நோர்வேயின் மக்னஸ் கார்ல்சன், ஆர்மேனியாவின் லெவான் ஆரோனியன் மோதிய போட்டி 47ஆவது நகர்த்தலின் போது சமநிலை செய்யப்பட்டது.

# மைதானம் மாற்றம்

(புதுடில்லி)
அவுஸ்ரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கான போட்டி மைதானம் மீண்டும் மாற்றப்பட்டுள்ளது.

தற்போது இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடருக்குப்பின் அவுஸ்ரேலிய அணி இந்தியா செல்லவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலானநான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான போட்டி மைதானம் மீண்டும் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் டெஸ்ட் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் 26ஆம்திகதி வரை டில்லியிலும், 2ஆவது டெஸ்ட் மார்ச் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மொகாலியிலும், 3ஆவது டெஸ்ட் மார்ச் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை ஹைதராபாத்திலும், 4ஆவது டெஸ்ட் மார்ச் 22ஆம் திகதி 26ஆம் திகதி வரை சென்னையிலும் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

இது தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புதிய அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அதன்படி, முதல் டெஸ்ட் சென்னையிலும், 2ஆவது டெஸ்ட் ஹைதராபாத்திலும், 3ஆவது டெஸ்ட் மொகாலியிலும், 4ஆவது டெஸ்ட் டில்லியிலும் நடைபெறும் என அறிவித்துள்ளது. திகதிகள் மாற்றப்படவில்லை.

# பார்சிலோனா அபார வெற்றி



(மாட்ரிட்)
மலாகா அணிக்கெதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. மாட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, மலாகா அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணியின் மெஸ்சி 26ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இந்த சீசனில் மெஸ்சி அடித்த 28ஆவது கோல் ஆகும்.

இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் பேப்ரிகாஸ் 49ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலும், தியாகோ 81ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலும் அடித்து அணியை 3-0 என்று முன்னிலை பெற வைத்தனர். கடைசி நேரத்தில் மலாகா அணியின் புனாேட் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

போட்டி முடிவில் 3-1 என்ற கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய 19 லீக் போட்டியில் 18 வெற்றி, ஒரு ஒரு சமநிலை உட்பட 55 புள்ளிகளுடன் உள்ள பார்சிலோனா அணி முதலிடத்தில் உள்ளது.

அட்லடிகோ மாட்ரிட் (44 புள்ளி), ரியல் மாட்ரிட் (37), ரியல் பெடிஸ் (34), மலாகா (31) அணிகள் முதல் ஐந்து இடங்களில் உள்ளனர்

# இளம் வீரர்களுக்கு மஹேல பாராட்டு



(அடிலெய்ட்)
இளம் வீரர்களின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கின்றது என இலங்கை அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவிற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பல நெருக்கடிகளை நாம் எதிர்நோக்கியிருந்தோம். வீரர்களின் தொடர்ச்சியான காயம் அணிக்குப் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இருப்பினும் இதற்கூடாக பல இளம் வீரர்கள் வாய்ப்புப் பெற்றிருப்பதும், சாதித்திருப்பதும் மகிழ்ச்சி. குறிப்பாக, மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட திரிமன்ன, அப்போட்டியில் சதமடிக்கும் வாய்ப்பை இழந்தது ஏமாற்றம்.

இருப்பினும், இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவர் சதமடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றமை சிறப்பான விடயம். அத்துடன் அவரின் தன்னம்பிக்கைக்குக் கிடைத்த சிறந்த பரிசு. இப்போட்டியில் எமது பந்துவீச்சாளர்களின் செயற்பாடு சிறப்பாக இருந்தது. தொடர்ந்து வரும் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அவுஸ்ரேலிய அணிக்கு நெருக்கடி கொடுப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தொடரையும் வெல்வோம்



(பேர்த் எலிசபெர்த்)
தொடர்ந்து மூன்றாவது டெஸ்ட் தொடரையும் வென்றது மகிழ்ச்சியளிக்கின்றது அடுத்து இடம்பெறவுள்ள பாகிஸ்தான்அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை நிச்சயம் கைப்பற்றுவோம் என்ற அதிக நம்பிக்கை எங்களுக் கிருக்கின்றது என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார். இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை வென்று தரப்படுத்தலில் முதலிடத்தை பிடித்தோம். அதனைத்தொடர்ந்து அவுஸ்ரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றோம். மூன்றாவதாக தற்போது நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியிருப்பதில் மகிழ்ச்சி. இதற்கு அனைத்து வீரர்களின் சிறப்பான செயற்பாடே காரணம். பந்து வீச்சு, துடுப்பாட்டம் என அனைத்துத்துறைகளிலும் எமது வீரர்களின் செயற்பாடு சிறப்பான முறையில் உள்ளது. அந்த வகையில் எதிர்வரும் பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரையும் கைப்பற்றிக் கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கூடைப்பந்து நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக ரமணன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், செயலாளராக ரட்சகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக எழில்மோகன், உப செயலாளராக ராஜசோபனா, பொருளாளராக பவன், மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக சுரேஷ்குமார், நகேந்திரம், ராதை அருளம்பலம், பிரசன்னா, ராஜேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (93)

## சௌதம்டன் அணி வெற்றி

இங்கிலாந்து பிறிமியர் லீக் கால்பந்துதொடரின் போட்டி ஒன்றில் சௌதம்டன் அணி வெற்றிபெற்றது.

அஸ்டன் வில்லா கழகத்திற்கும், சௌதம்டன் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சௌதம்டன் கழகம் 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அக்கழகம் சார்பாக 35ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி உதையொன்று கோலாக்கப்பட்டது.


இதேவேளை, புல்ஹாம் அணிக்கும், விகான் அத்லட்டிக் அணிக்குமிடையிலான போட்டி 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. புல்ஹாம் அணி சார்பாக 22ஆவது நிமிடத்திலும், விகான் அத்லட்டிக் கழகம் சார்பாக 71ஆவது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

ரெடிங் கழகத்திற்கும், வெஸ்ட் ப்ரோம்விச் கழகத்திற்குமிடையிலான போட்டியில் ரெடிங் கழகம் 3-2 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. வெஸ்ட் ப்ரோம்விச் கழகம் சார்பாக 19ஆவது, 37ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டபோதிலும், ரெடிங் கழகம் சார்பாக 82ஆவது, 88ஆவது, 90ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட அவ்வணி வெற்றிபெற்றது.

# கபில்ராஜ், கனமிர்தன் சிறந்த இணைப்பாட்டம் சென். ஜோன்ஸ் இனிங்ஸ் வெற்றி



கனமிர்தன்



கபில்ராஜ்

(யாழ்ப்பாணம்)

கபில்ராஜ், கனமிர்தன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கெதிரான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான போட்டி கடந்த 12,13ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பானுகோபன் 30, அங்கதன் 16, வியூரதன் 15, டிணலான் 13, மனுவல் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், கனமிர்தன் 30 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல். இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கபில்ராஜ், கனமிர்தன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 184 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் சென். ஜோர்ன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கனமிர்தன் ஒரு சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 91 ஓட்டங்களையும், கபில்ராஜ் இரண்டு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றும் கிருத்திகன் 36, அமிதஜன், பிருந்தாபன் தலா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலான் 117 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், மனோகரன் 50 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

202 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி பிருந்தாபனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் துவாரகன் 20, அனுஸ்காந் 21, டிணலான் 18, தனுஜன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிருந்தாபன் 44 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், லோகதீஸ்வர் 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (எஸ்.பி.)

# கிண்ணம் வென்றது ஞானம்ஸ்



(நெல்லியடி)

இமையாணன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணத்தை வென்றுள்ளது.

வடமராட்சி இமையாணன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட பத்து ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகாஷ் 07, துவிகரன் 11, அனுசயந்தன் 15, நவநீதன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரமேஸ் மூன்று, அசோக், நந்தபாலன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று இரண்டு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் திவாகர் 24, கோகுலன் 11, செந்தூரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சேந்திரன் மூன்று, சுதந்ரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சுகந்தன், தொடர் நாயகன் மற்றும் சிறந்த களத்தடுப்பாளராக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த அனுசயந்தன் தெரிவு செய்யப்பட்டனர்.இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுநர் பா. முகுந்தன் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (12)

விளையாட்டுச் செய்திகள்

## உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். கலைத்தூது கலையரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் எஸ்.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு, .கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் அகில இலங்கை இளைஞர் சேவை மன்றத் தலைவர் லலித் கியும் பெரேரா, மற்றும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 3

– ருவான் எம் ஜயதுங்க –



“பல தமிழ் புத்திஜீவிகள், இந்த குழந்தைப் படை வீரர்கள் தேர்வு ஒரு கலாசார மரணத்தைக் குறிக்கிறது எனக் கூறியுள்ளார்கள். தமிழ் சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், மற்றும் புத்திஜீவிகள் போன்றோர், சிறுவர்களை கொலைக் களத்துக்கு சமமான போருக்கு அனுப்புவதையிட்டு எல்.ரீ.ரீ.ஈ க்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். எல்.ரீ.ரீ.ஈயை தைரியமாக எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டார்கள். மௌனமாக எதிர்த்த வெகுஜனங்கள், தினசரி ஆட்சேர்ப்பு என்கிற அடிப்படையில் சிறுவர்களை உள்ளீர்த்து வந்த யுத்த விளையாட்டில் படிப்படியாக நாதியற்ற ஒரு பார்வையாளராக மாறினார்கள். சாதாரண நடைமுறையில் இந்த சமூகத்தின் சக்திமிக்க அபிவிருத்தியாளர்களாக மாறியிருக்கக் கூடிய தமிழ் சிறுவர்களின் ஒரு முழுத் தலை முறையுமே அழிக்கப்பட்டது” (சோமசுந்தரம் - 2007).

“ஈழப் போருக்கான மனித உயிர்ச் செலவு அளவுக்கு மீறிய விகிதத்தில் உயர்ந்தது. எல்.ரீ.ரீ.ஈ இற்கு மேலும் மேலும் மனித வளம் தேவையாக இருந்தது. இந்திய இராணுவத்துடனான ஆரம்ப யுத்தத்தில் பிரசித்தி பெற்ற பல எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். அதன் பின் எல்.ரீ.ரீ.ஈ அடிக்கடி பத்து வயது நிறைந்தவர்களின் கைகளில்கூட கைத்துப்பாக்கிகளைக் கொடுத்து, பொதுமக்களின் வாழ்க்கை நிலையை வழமை நிலைக்கு கொண்டுவர பணியாற்றிய உள்ளூர் சமூகத் தலைவர்களையும் கொல்லும்படி செய்தது. சமூகம் உள்ளக பயங்கரவாதத்தின் கட்டுப்பாட்டில் வந்ததுடன் ஒரு தார்மீக வெறுமையின் பிடிக்கும் உள்ளானது. வாழ்வும் சாவும் அதன் அர்த்தத்தை இழந்து போனது. தேசப்பற்றாளர் மற்றும் தேசத் துரோகி எனும் பதங்கள் நாவன்மை உடை-யோரின் வெறும் கிளர்ச்சியூட்டும் வாய்ப்பேச்சாகவே இருந்தது” (ஹுல் - 2003).

“குழந்தைகள் பட்டாளத்துக்கு ஆட்சேர்ப்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ எண்ணற்ற முறைகளைக் கையாண்டது. இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் அவர்களின் வயதின் காரணமாக முதிர்வின்மை, ஆர்வம், மற்றும் சாகசம் புரிவதிலுள்ள விருப்பம் என்பனவற்றின் உந்துதலினால் செப்படி வித்தைக்காரன் செயலில் சுலபமாக மயங்குவதைப்போல பல்வேறு உளவியல் முறைகளால் தூண்டப்பட்டார்கள். யுத்த உபகரணங்களை பகிரங்க காட்சிக்கு வைப்பது, மரணமடைந்த வீரர்களின் சுவரொட்டிகள் மற்றும் மரண ஊர்வலங்கள், குறிப்பாக பாட-சாலைகளில் நிகழ்த்தப்படும் பேச்சுகள் மற்றும் வீடியோக் காட்சிகள், வீரப் பிரதாபங்களை விளக்கும் இனிய பாடல்கள் மற்றும் கதைகள் என்பன தேசப்பற்றை ஊட்டுவதுடன் தியாகிகளின் வழிபாட்டையும் உருவாக்குவது போன்றவை ஒரு கட்டாய சூழலில் நடைபெற்றன” (சோமசுந்தரம் - 2007). சில மனித உரிமை ஆர்வலர்களின் கூற்றுப்படி, மோதலின் உச்சத்தில் எல்.ரீ.ரீ.ஈ, தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த பாடசாலைகளுக்குச் சென்று, அங்கிருந்த பாடசாலை மாணவர்களை கடத்திச் சென்றது. பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அதை தடுக்க முடியாதவர்களாக இருந்தனர். இந்தப் பிள்ளைகளுக்கு போதனையூட்டி, அவர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின்போது வீட்டுக் கவலையினால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகள் நித்திரை செய்வது தடுக்கப்பட்டதுடன் கடுமையான உடற்பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அந்தச் சிறுவர்கள் ஒரு கடுமையான நேர அட்டவணையை பின்பற்றவேண்டி இருந்ததுடன், ஆயுதப்பயிற்சியும், விசேடமாக கைத்துப்பாக்கிகள், ஏகே 47 துப்பாக்கிகள், ராக்கெட் சுழற்சியுடன் கூடிய கையெறி குண்டு, கண்ணி வெடிகள் மற்றும் ஏனைய தந்திரோபாயமான ஆயுதங்கள் என்பனவற்றை இயக்கும் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இனவெறி ஊட்டும் போதனைகளை அவர்களிடம் தொடர்ந்து மேற்கொண்டதுடன், இயக்கத்தின் மீது விசுவாசமாக இருக்கவேண்டும் என்றும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இறுதியாக ஏதாவது வழியில் அவர்கள் எதிரிகளிடம் பிடிபட நேர்ந்தால் அந்தச் சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்காக அவர்களிடம் சயனைட் வில்லைகளும் வழங்கப்பட்டன.



(தொ[illegible]ம்)

## தோற்றமும் தகுதியும்



ஓவியர் ஒருவர் மாவீரன் நெப்போலியனைப் பேட்டி காணச் சென்றார். ஏழ்மையில் வாடி கந்தலும் கிழிசலுமான உடை அணிந்திருந்த அந்த ஓவியரிடம் சிறிது அருவருப்புடனேயே நெப்போலியன் பேட்டியளித்தார். ஆனால் ஓவியரின் அறிவும், பண்பும், கலைத்திறனும் உடைய சிறந்த கலைஞர் என்பதைப் பேசிக்கொண்டிருக்கையிலேயே புரிந்து கொண்டார் நெப்போலியன். பேட்டி முடிந்ததும் ஓவியரும் எழுந்தார். முதலில் அருவருப்புக் காட்டிய நெப்போலியன் பின்பு பரிவுடன் பேசியதைக் கண்ட ஓவியர் வியப்போடு அதன் காரணத்தை நெப்போலியனிடமே கேட்டுவிட்டார். சிரித்துவிட்டு நெப்போலியன் சொன்னார், “ஓவியக் கலைஞரே! முன்பின் தெரியாதவர்களுக்கு அவரவர்களுடைய வெளித் தோற்றத்துக்கு ஏற்ப வரவேற்பு. ஆனால் பழகிப் பிரியும்போது அவரவர் தகுதிக்கேற்ப விடை கொடுக்கிறோம்” என்றார்.


## சத்தியத்தை வெல்ல ஆயுதமில்லை



இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்து ஆவேசமாக, “நமக்கு அடிமையாக இருந்த எல்லா நாடுகளிலும் நடந்த கலவரங்களையும் சுதந்திரப் போராட்டங்களையும்' அடக்கிவிட்டோம். ஆனால் இந்தியாவில் நடைபெறும் சுதந்திரப் போராட்டத்தை ஏன் அடக்க முடியவில்லை” என்று கேட்டார்.

அதற்கு பிரதமர் வின்சென்ட் சேர்ச்சில் எழுந்து, “எந்த நாடும் கத்தியைக் கொண்டு போராடினால் துப்பாக்கியைக் கொண்டு அடக்கிவிடலாம். துப்பாக்கியைக் கொண்டு போராடினால் பீரங்கிகளைக் கொண்டு அடக்கிவிடலாம். பீரங்கிகளைக் கொண்டு போராடினால் ஆகாய விமானத்திலிருந்து குண்டு வீசி அடக்கிவிடலாம். ஆனால் இந்தியா சத்தியத்தைக் கொண்டல்லவா போராடுகிறது? சத்தியத்தை வெல்ல உலகத்தில் எந்த ஆயுதமும் இல்லையே” என்று கூறினார்.

## கேளுங்கள்!



- கால் விரல் நகங்களைவிட கை விரல் நகங்கள் சுமார் நாலு மடங்கு வேகமாக வளர்கின்றன
- சலிப்பு என்று பொருள்படும் "Boredom" என்ற வார்த்தையை உருவாக்கியவர் எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸ்
- பல ஆண்டுகளாக சுருட்டு புகைத்து வரும் ஒருவரின் இரத்தத்தை அட்டை கடித்து உறிஞ்சினால் அந்த அட்டை இறந்துவிடும்.
- “ஒக்டினோ டைசீட்” என்ற உயிரினம் நிலத்தில் ஒரு சிறங்கை அளவுள்ள மண்ணில் நிறைய உள்ளது. இதன் மீது மழை பெய்யும்போது, இந்த உயிரினம் கிளர்ந்து எழுகிறது. அப்போது ஏற்படும் வாசனையைத்தான் மண் வாசனை என்கிறோம்.
- ஒக்டோபஸ் பிறக்கும்போது ஒரு ஈ அளவுதான் இருக்கும்.
- பறவை இனத்தில் ஆந்தையால் மட்டுமே நீல நிறத்தை காண முடியும்.

## வயது தடையல்ல!



★ சத்ரபதி சிவாஜி எதிரியிடமிருந்து கோட்டையைக் காப்பாற்றியபோது அவருக்கு வயது 13.

★ ரவீந்திரநாத் தாகூர் ஷேக்ஸ்பியரின் “மக்பெத்” நாடகத்தை வங்காள மொழியில் மொழிபெயர்த்தபோது அவருக்கு வயது 14.

★ ஜான்சிராணி ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டது 17ஆவது வயதில்.

★ திருப்பூர் குமரன் கொடி காத்த குமரனாக உயிர் துறந்தபோது அவருக்கு வயது 26.

★ புத்தர் ஞானம் பெற அரண்மனையை விட்டு வெளியேறியபோது அவருக்கு வயது 27.

★ ஜி.யு. போப் 75 வயதைத் தாண்டிய பின்னரே திருவாசகத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினார். 656 பாடல்களை 5 ஆண்டுகளில் மொழியாக்கம் செய்து 24.4.1900இல் நூலாக வெளியிட்டார். சாதனைக்கு வயது தடையல்லவே!

# சினிமா சினிமா


▶ “விஸ்வரூபம்” படத்தில் கமலை தவிர மற்ற வேடங்களுக்கு பிரபல நடிகர்களைப்



பயன்படுத்தாதது ஏன் என்பதற்கு பதிலளித்தார் கமல்ஹாசன்: “இமேஜ் உள்ள நடிகர்கள் எப்போதாவதுதான் என் படங்களுக்கு தேவைப்படுகிறார்கள். இந்தப் படத்தை பொறுத்தவரை கதையை நம்பி மட்டுமே நான் களம் இறங்கியிருக்கிறேன். படம் பார்த்தவர்கள் பலர் என்னை வெகுவாகப் பாராட்டி இருக்கிறார்கள். அந்த உணர்வு ரசிகர்களுக்கும் ஏற்பட வேண்டும். நிச்சயம் ஏற்படும். குறித்த நேரத்தில் ஷூட்டிங் நடத்தி, முடிப்பது என் படங்களில் இயல்பாக நடக்கும். அதை இமேஜ் உள்ள நடிகர்கள் செய்து கொடுப்பார்களா என்பதில் சந்தேகம் இருக்கிறது” என்கிறார் கமல்ஹாசன்.

▶ 34 படங்களில் 103 பாடல்கள் எழுதி தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக பாடலாசிரியர்களில் முன் வரிசையில் இருக்கிறார் நா.முத்துக்குமார். இதில் பத்து படங்களுக்கு முழுப் பாடல் எழுதியிருக்கிறார். எந்தப் படத்துக்கு பாடல் எழுதியது மறக்க முடியாதது என்ற போது, “நிறைய இருக்கிறது. இளையராஜாவின் இசையில் “நீதானே என் பொன்வசந்தம்” படத்துக்கு முழுப்பாடல்களையும் எழுதியது முக்கியமானது. “ஒரு பாதிக் கதவு நீயடி.... மறு பாதி கதவு நானடி...” என்ற என் பழைய கவிதை ஒன்று “தாண்டவம்” படத்துக்காக பாடலானதும் மறக்க முடியாதது” என்கிறார் நா.முத்துக்குமார்.

▶ டொனால்ட் ஈ வெஸ்லேக் எழுதிய பிரபல நாவல் “∴ப்ளாஷ்∴பயர்”. ஊரை சுத்தம் செய்ய வேண்டும் என்றால் சாக்கடையில் இறங்கித்தான் ஆக வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்து வெளிவந்து, அரசியல் மையங்களில் பெரும் பரபரப்பை உண்டாக்கிய இந்நாவல் “பார்க்கர்” என்ற பெயரில் ஹொலிவுட் படமாகியுள்ளது. பிரபலமான இசை அல்பங்கள் பலவற்றை இயக்கி புகழ் பெற்ற டெய்லர் ஹாக்∴போர்ட் இப்படத்தை இயக்கியுள்ளார். “தி டிரான்ஸ்போர்ட்டர்” பட ஹீரோ ஜேசன் ஸ்டேதம் முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்க, படம் முழுவதும் சாகசங்கள் செய்யும் நாயகியாக வருகிறார் ஜெனிபர் லோபஸ். ஜனவரி 25ஆம் திகதி உலகம் முழுவதும் இப்படம் வெளிவருகிறது.







▶ ராஜீவ் காந்தி வாழ்க்கையை திரைப்படமாக எடுக்க பவ்னா தல்வார் திட்டமிட்டிருக்கிறார். ஆங்கில படங்களில் நடிக்கும் நடிகர்களான கொலின் பிரித், ரிஸ் அகமது (மீரா நாயரின் லேட்டஸ்ட் படமான ரிலக்டன்ட் ∴பண்டமெண்டலிஸ்ட் படத்தின் ஹீரோ) ஆகியோரை முதலில் நடிக்க வைத்த பவ்னா தல்வார், இறுதியில் ராஜீவ் காந்தியாக நடிக்க, அபிஷேக் பச்சனை முடிவு செய்திருக்கிறார். சோனியா காந்தியாக யாரை நடிக்க வைப்பது என்பது தான் பெரிய சவாலாக இருக்கிறதாம். நடிகை மோனிகா பெலுசியின் பெயர் லிஸ்டில் முதலிடத்தில் இருக்கிறது. தந்தையின் (அமிதாப் பச்சன்) நெருங்கிய நண்பராக, மகன் அபிஷேக் பச்சன் நடிப்பதும் பொருத்தம் தானே.

▶ வாரிசுகளின் வரிசையில் அடுத்ததாக களம் இறங்குகிறார் நடிகை ரூபினியின் மகள். கோமல் என்ற இயற்பெயர் கொண்ட ரூபினி, ரஜினிகாந்துடன் “மனிதன்” படத்தின் மூலம் அறிமுகமானார். கமல் ஹாசன் உள்ளிட்ட பிரபல ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்த ரூபினி, சினிமாவை விட்டு ஒதுங்கி மும்பையில் தங்கியிருக்கிறார். கல்லூரிப் படிப்பை முடித்த தன் மகளை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்த சில இயக்குநர்களிடம் பேசி வருகிறாராம். ராதா தன் இரு மகள்களையும் அறிமுகப்படுத்தி விட்டார். கமல், சரத்குமார், அர்ஜுன் ஆகியோரது மகள்களும் சினிமாவுக்கு வந்து விட்டனர். இப்போது ரூபினியின் மகள்.

▶ 1982ஆம் ஆண்டு பாலு மகேந்திரா



இயக்கத்தில், கமல் - ஸ்ரீதேவி நடித்த படம் மூன்றாம் பிறை. அதன் பிறகு, ஹிந்தியில் ரீ-மேக்கான, சத்மா என்ற படத்திலும், இந்த ஜோடியே நடித்தனர். முக்கியமாக, கமலுக்கு தேசிய விருது வாங்கித் தந்த, மூன்றாம் பிறை படத்தின், இரண்டாம் பாகத்தை தமிழ் மற்றும் ஹிந்தியில் படமாக்கும் முயற்சி ஒன்று தற்போது நடந்து வருகிறது. இறுதிக் காட்சியில் கமலை பிரியும் ஸ்ரீதேவி உண்மை தெரிந்து அவரிடமே வந்து சேருவது போல் கதை அமைக்கப்பட்டு வருகிறது. அப்படத்தில் நடிக்க ஸ்ரீதேவி தயாராக இருந்த போதும், கமல் தரப்பில் இன்னும் சாதகமான பதில் சொல்லப்படவில்லை.

# ஸ்டாலின் தி.மு.க.வைக் காப்பாற்றுவாரா?

ஸ்டாலினைத்தான் தி.மு.க.வின் அடுத்த தலைவராகத் தாமே முன்மொழிவேன் என்று கருணாநிதி சொல்லி விட்டதால், அவர்தான் இனி தி.மு.க ஆட்சிக்கு வந்தால் முதல்வராகவும் இருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உட்கட்சி ஜனநாயகம் உள்ள இயக்கம், ஸ்டாலினை எதிர்த்து யாரும் போட்டியிடலாம் என்றெல்லாம் கலைஞரும் அன்பழகனும் சொன்னாலும், தி.மு.க.வில் இதுவரை கலைஞரை எதிர்த்து யாரும் வேட்பு மனு கூட தாக்கல் செய்ததில்லை. அதே நிலைதான் தொடரும்.


அழகிரி எதிர்த்துப் போட்டியிட்டால், கட்சி இன்று இருக்கும் நிலையில் அவருக்குத்தான் அது அவமானமாக முடியும். அந்தத் தப்பை அவர் செய்ய மாட்டார் என்று எதிர்பார்க்கலாம். ஸ்டாலினுடன் சமரசம், அல்லது அதிரடியாக அ.தி.மு.க.வுக்குப் போய் ஜெயலலிதாவின் வாரிசாக இடம் பிடிக்க முயற்சிப்பது என்ற இரு வழிகளைத் தவிர அவருக்கு வேறு சாய்ஸ் இனி இல்லை.

அழகிரி செகண்ட் சாய்ஸை எடுப்பதை, கலைஞருக்குப் பின் தி.மு.க.வைப் பலவீனப்படுத்த விரும்பும் டில்லி காங்கிரஸ் தலைமையும் உளவுத்துறையினரும் நிச்சயம் விரும்புவார்கள். எழுபதுகளில் எம்.ஜி.ஆரைப் பயன்படுத்திய மாதிரி இப்போது அழகிரியைப் பயன்படுத்த முடியுமா என்று முயற்சிக்கலாம்.

ஆனால், அழகிரி, எம்.ஜி.ஆர் அல்ல. எனவே சினிமாவில் முத்துவுக்கு ஏற்பட்ட கதியே அவருக்கும் அரசியலில் ஏற்படும். குடும்பத்துக்குள் சமரசம் என்பதுதான் ஒரே தீர்வு.

“கட்சி தேர்தல் எப்போது நடக்கிறதோ, அப்போது நான் உயிரோடு இருந்தால்” ஸ்டாலினையே முன் மொழிவேன்” என்று கருணாநிதி சொல்லி இருக்கிறார்.

தம் காலம் முடிவதற்கு முன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து




விட்டே தாம் விடைபெறவேண்டும் என்ற மன உறுதி அவருக்கு இப்போது வந்திருப்பதையே இதுகாட்டுகிறது. எனவே தி.மு.க.வின் அடுத்த தலைவர் ஸ்டாலின் தான். அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தால் அடுத்த முதல்வரும் அவர்தான்.

ஸ்டாலினால் தி.மு.க.வைக் கட்டிக் காப்பாற்ற முடியுமா?

“தி.மு.க. முடிந்து போன கதை” என்று அண்மையில் ஜெயலலிதா தம் கட்சிப் பொதுக் குழுவில் அலட்சியமாக அறிவித்தார். அது அவரது ஆசை. ஆனால் அவ்வளவு சுலபத்தில் தி.மு.க. முடிந்த கதையாகாது. வலுவான கட்சி அமைப்பும் மீடியா பலமும், சுமார் 25 சதவிகித வோட்டு ஆதரவும், சமூகத்தில் காலத்தின் தேவையால் உருவான சரித்திரப் பின்னணியும் உள்ள அமைப்பு அது.

அண்ணா 1949இல் தி.மு.க.வை ஆரம்பித்த போது அவருக்கு வயது நாற்பதுதான். கட்சியின் அடுத்த நிலைத் தலைவர்கள் பெரும்பாலோரின் வயது 30 இலிருந்து 40இற்குள் இருந்தது. அத்தனை இளமையான இயக்கமாக அது தொடங்கியது. ஆனால் 88 வயது வரை பதவியை விட்டு இறங்க மறுத்த பிடிவாதத்தால், கலைஞர் இன்று அந்தக் கட்சியை முதியோர் இல்லமாக மாற்றிவிட்டார். கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் வயது 75. அடுத்த நிலையினருக்கு வயது 60இற்கு மேல். ஸ்டாலின் தலைவராகும் போது அவருக்கும் வயது 60ஐக் கடந்து விட்டிருக்கும். இன்றைய 20இலிருந்து 35 வயது வரையிலான இளைஞர்களைக் கட்சிக்குள்ளும் அதற்கு ஆதரவாகவும் ஈர்க்க ஸ்டாலினால் இயலுமா என்பதே கேள்வி. இன்றைய தமிழ் இளைஞர்களில் ,பெரும்பாலோர் ஈழத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. பெரும் துரோகம் செய்த கட்சி என்ற கருத்திலேயே இருக்கிறார்கள். நடுவயதினர் ஊழலை விஞ்ஞானபூர்வமாகச் செய்ய எல்லா கட்சிகளுக்கும் வழிகாட்டிய கட்சி என்றே கருதுகிறார்கள்.

இந்தச் சூழலில் கடுமையான மாற்றங்களைச் செய்யவும் தம்மையும் கட்சியையும் சுயவிமர்சனம் செய்து கொள்ளவும் ஸ்டாலின் முன்வந்தால்தான் தி.மு.க.வைப் பழையபடி இளைஞர் கட்சியாக, கோட்பாடுகள், இலட்சியங்களுக்கான இயக்கமாகப் புதுப்பிக்கமுடியும். அதற்கான ஆற்றல் அவரிடம் இருக்கிறதா?

கலைஞரிடம் இருக்கும் பல ஆற்றல்கள் பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை, அரசியல் வியூகம் கட்டுவது போன்றவை ஸ்டாலினிடம் இல்லை. அதே போல கலைஞரின் பல பலவீனங்களும் ஸ்டாலினுக்கு இல்லை. வாராவாரம் பாராட்டு விழாக்கள், சினிமா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, பத்திரிகை நிருபர்களிடம் எரிந்து விழுவது, இதழாசிரியர்களுக்கு போன் செய்து கடிந்து கொள்வது. நேரடி பதில் சொல்லாமல் மழுப்புவது, வார்த்தை விளையாட்டு எல்லாம் இல்லை. கலைஞர் அளவு புகழாரம், ஆடம்பர கட்அவுட் கலாசாரம் ஆகியவற்றில் ஸ்டாலின் அதிக ஈடுபாடு காட்டவில்லை. அதிலிருந்து முற்றாக வெளியே வந்தால் கூட நல்லது.

எம்.ஜி.ஆர் காலத்திலேயே தொடங்கி ஜெயலலிதா காலத்தில் உச்சத்துக்குச் சென்ற கலைஞரின் விரோத பாவம், நேரில் சந்திப்பதைத் தவிர்ப்பது போன்றவை ஸ்டாலினிடம் இல்லை. நேரில் ஜெயலலிதாவைச் சந்திக்க அவர் தயங்கியதில்லை.

தி.மு.க. என்ற பழைய ஜமீன் வீடு ஸ்டாலின் கைக்கு வந்துவிட்டது. அதை ஒட்டடை அடித்து, சுத்தப்படுத்தி விரிசல்களுக்கு ஒட்டுப் போட்டு கூரை ஓட்டைகளை அடைத்து வைத்துப் பயன்படுத்தப் போகிறாரா, அல்லது இது உதவாது, இது இருக்கும் திராவிட இயக்க சுயமரியாதை மனை மட்டும்தான் தேறும், முற்றாக இடித்துவிட்டு புது வீடாகக் கட்டுவோம் என்று கட்டப் போகிறாரா என்பது ஸ்டாலின் கையில்தான் இருக்கிறது.

- ஞாநி கட்டுரையிலிருந்து.

**'நேற்று நடந்ததைப் பேசாதே**
**நாளையை எண்ணி வருந்தாதே**
**கடந்ததையும் வரப்போவதையும்**
**நம்பிக் காலத்தை வீணாக்காதே**
**இந்தப் பொழுதை இறுகப் பிடி'**

என்னும் உமர் கய்யாமின் கவிதை வரிகளைப் போல் வாழ்பவன் சிறுவன் குர்ஷித். பிறவியிலேயே பார்வைத் திறன் கிடையாது. ஆனால், மலர்களில் தேன் சேகரிக்கும் தும்பியையும், மலத்தில் அமரும் வண்டையும் அவற்றின் சிறகடிப்பின் ரீங்காரத்தை வைத்தே கண்டுபிடிக்கும் அளவுக்கு செவிக் கூர்மை உண்டு.

பழங்களைக் காம்புடன் எடுத்துக் காதுகளில் தொங்கவிட்டு லோலாக்கு போல ஆட்டிப் பார்த்துக் கொள்வாள், தண்ணீர் எடுக்கக் குளத்துக்குப் போனால் தன் ஆடையினுள் மறைத்து வைத்திருக்கும் சிறிய கண்ணாடியை வெளியில் எடுத்து யாரும் கவனிக்காமல் தன் அலங்காரங்களையும், முக அழகையும் தானே ரசித்துப் பார்ப்பாள். ஒளியால் துலக்கம் பெறும் காட்சிகளின் அழகில், மலர்களின் வண்ணங்களில், பழங்களின் சுவையில் மனம் கரைபவள். குர்ஷித் ஒலியின் காதலன் என்றால், நதீரா ஒளியின் காதலி.


ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக இசை

றால் அவர்கள் சப்தம் என்கிற ஒன்றையே அறிந்திருக்கமாட்டார்கள். கேட்கும் திறனைப் பாதியில் இழந்தவர்களுக்கே ஒலிகள் ஓய்ந்த நிசப்தம் அனுபவமாகிறது.

மண்ணில் புரட்டியெடுக்கப்படும் காந்தத் துண்டு மற்ற அனைத்தையும் உதறி இரும்புத் தூசியை மட்டும் உடலெங்கும் அப்பியெடுத்துக் கொண்டு வருவது போல, இரைச்சலான ஓசைகள் மிகுந்த புற உலகில் இருந்து இனிய இசைக்கான தூய ஒலிக்குறிப்புக்களை மட்டும் தனியாகப் பிரித்து எடுக்கும் நுண்மையான செவித்திறன் கொண்ட குர்ஷித்தின் இசை எப்படி நிசப்தத்தில் இருந்து பிறந்த இசையாக இருக்க முடியும்?

# நிசப்தத்தில் பிறந்த இசை

**- பிரகாஷ் சங்கரன்**




மழைத் துளி மண்ணைத் தீண்டும் முன் வானிலேயே வாய்திறந்து அதைப் பருகித் தாகம் தணிந்து இசைபாடும் சாதகப் பறவை போல, எங்கும் எப்போதும் இசைக்காக மனம் திறந்து காத்திருந்து அதைச் செவிகளால் அள்ளிவிடும் குர்ஷித்தின் அகத்திற்குள் விதையாக வந்து விழும் ஒரு ஒலியும், அது மெல்ல வளர்ந்து மாபெரும் இசையாகப் பரிணமித்து அவனையும் மீறி இந்த உலகத்தை நிறைக்கும் தருணத்தையும் காட்சிப்படுத்தி இருக்கும் ஈரானியத் திரைப்படம் -The Silence.

பார்வை உள்ளவர்களின் கவனத்தைக் கண்கள் சிதறடிப்பது போல, நுண்ணிய செவிப்புலன் கொண்ட குர்ஷித்தின் கவனத்தை அவனது காதுகள் கலைக்கின்றன. அவன் வீட்டைவிட்டு இறங்கினால் காதுகளைப் பஞ்சை வைத்து அடைத்து விரல்களால் அழுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அன்று மலர்ந்த மலர்களில் ஊறியிருக்கும் புதுத் தேனும், மகரந்தமும் தேனீயைத் தன் திசை நோக்கிக் கவர்ந்து இழுப்பது போல, தெருவில் எங்காவது கேட்கும் இசை அவனை ஈர்த்து இழுத்துக் கொண்டு போய்விடும். இசை வரும் திசையில் போய் அதன் இனிமையில் மூழ்கி மயங்கியிருப்பான். இதனால் ஒவ்வொரு நாளும் வேலைக்குச் செல்ல தாமதமாகிவிடும்.

குர்ஷித்துக்கு இசைக்கருவிகள் தயாரிக்கும் ஒரு சிறிய தொழிற்கூடத்தில் விற்பனைக்கு அனுப்பும் முன் இசைக்கருவிகளைச் சுருதி கூட்டிப் பார்த்து சரி செய்யவேண்டிய வேலை. அப்பா இல்லாமல் அம்மாவுடன் இருக்கும் சிறிய வீட்டிற்கு வாடகை தரமுடியாமல் ஏழ்மையில் கழியும் சிரமமான வாழ்க்கை. வீட்டு உரிமையாளர் மாத இறுதிக்குள் பணம் தரச் சொல்லி கெடு விதித்திருக்கிறார். பணம் தராவிட்டால் வீட்டைக்காலி செய்து சாமான்களைத் தெருவில் வீசிவிடுவார். மாத இறுதிக்கு இன்னும் ஐந்து நாட்கள் தான் உள்ளன. ஆனால் குர்ஷித்தின் மனம், வீட்டுக்காரர் தினமும் அதிகாலையில் வீட்டுக் கதவை 'ப.ப.ப.பம்ம்...' என்று தட்டும் சத்தத்தில் உள்ள சந்தத்தில் லயித்துக் கிடக்கிறது.

அம்மா தினமும் முதலாளியிடம் முன்பணம் வாங்கிவரச் சொல்லி ஞாபகப்படுத்துகிறாள். குர்ஷித்துக்கு ஐந்து நாளைக்குப் பின் வீட்டை விட்டு இறக்கி விடப்படும் நிலையை விட அன்று காலையில் கேட்கும் கதவைத் தட்டும் சத்தத்தில் துவங்கி,

> கண் மற்றும் செவியால் உணரப்படுவதாகிய ஒளியும், ஒலியும் தான் மனிதனால் மிக ஆழ மாகவும், விரிவாகவும் வளர்த்தெடுக் கப்பட்டு மாபெரும் கலைகளாக மேம் படுத்தப்பட்டுள்ளன. துயரமான முரணாக இந்த இரண்டு புலன்களை மட்டும்தான் மனித இனத்தில் பிறவியிலேயே இழக்கும் சாத்தியத்தை இயற்கை விதித்துள்ளது. பிற மூன்று புலன்களிலும் பிறவிக் குறைபாடு விதிக்கப்பட வில்லை.

தெருவில் கேட்கப் போகும் இனிமையான குரல்களும், இசையும் தான் மனதை ஆக்ரமித்து இருக்கிறது. நாளையைப் பற்றிய கவலைகளினால் அன்றைய நாளின் இனிமையைத் தவறவிட மாட்டான்.

குர்ஷித்துக்கு ஒரு தோழி இருக்கிறாள். அவனுடன் வேலை பார்க்கும் நதீரா என்னும் அனாதைச் சிறுமி. வண்ணமயமான அழகான ஆடையை நேர்த்தியாக அணிந்திருப்பாள், பூக்களின் இதழ்களைக் கிள்ளியெடுத்து தன் நகங்களில் நகப்பூச்சாக ஒட்டி அலங்கரித்துக் கொள்வாள், சிவந்த செர்ரிப்

அவனை அலைக்கழித்து இழுத்துச் சென்று விடுகிறது. அப்படி ஒரு நாள் ஒரு மாணவனின் இசையைத் தொடர்ந்து சென்று இசைப்பள்ளி ஒன்றை அடைகிறான். இசை ஆசிரியர், குர்ஷித் வேலை பார்க்கும் இடத்தில் வாங்கிய இசைக்கருவிகள் நன்றாக இல்லை, எதி லும் சரியான ஸ்ருதியே இல்லை என்று குறை சொல்கிறார். ஒரு இசைக்கருவியை குர்ஷித்தின் கையில் கொடுத்து முதலாளியிடம் கொண்டு போய் திரும்பக்கொடுக்கச் சொல்கிறார். குர்ஷித் மௌனமாக இசைக் கருவியைச் சுமந்தபடி திரும்புகிறான்.

இசைக்கருவியை எடுத்துக்கொண்டு அவன் நடந்து போகையில் தூறலுடன் ஆரம்பிக்கிறது மழை. இசைக்கருவி மழையில் நனைந்துவிடாமல் காக்க குர்ஷித் ஓடும் போது கால் தடுமாறி குப்புற விழுகின்றான். அவன் கையில் இருந்து தவ றிய இசைக்கருவி தள்ளித் தரையில் மல்லாந்து கிடக்கிறது. மழை வலுக்கிறது.
மழைத்துளிகள் இசைக்கருவியின் தந்திகளின் மேல் விசையுடன் விழுகிறது. தந்திகள் அதிர்ந்து மீட்டப்பட, இசைக்கருவி சிலிர்த்துக்கொண்டு ஒலிகளை எழுப்புகிறது. இயற்கை தன் நூற்றுக்கணக்கான கரங்களால் மீட்டும் - மனித மனம் கற்பனையே செய்திட முடியாத முற்றிலும் புதுமையான இசை அங்கே நிகழ்கிறது.
குர்ஷித் சேர்த்திருந்த ஸ்ருதி இயற்கையின் பேரிசைக்கு பொருத்தமாக இருக் கிறது. குர்ஷித் அந்த இசையின் திசையை நோக்கி மெல்லத் தரையில் ஊர்ந்து, கைகளால் தடவிச் சென்று இசைக்கருவியை அடைகிறான். காட்சியின் முடிவில் தந்திக்கருவியை இசைத்த மழைத்துளிகள் சென்று கலந்த ஏரியில், இசைக்கருவி மிதக்க, கழுத்தளவு மூழ்கி குர்ஷித் இருக்கிறான். மழை ஓய்ந்த ஏரி சூரியனின் வெள்ளி ஒளிபட்டு தகதகக்கிறது.
இதுவே அவனும், இசையும் அதைத் தந்த இயற்கையும் ஒன்றாகக் கலக்கும் இடம். குர்ஷித் மனிதர்களின் ஸ்ருதிக்கு அப்பாலுள்ள தன் மனதின் இசையை இயற்கையில் கண்டுகொள்ளும் மிக முக்கிய மான தருணம்.

மனிதர்களில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் அனுபவங்கள் வழியாக அறிதல் நிகழ்கிறது. மெய் வழியாக தொடுதல் உணர்வையும், வாய் மூலம் ருசியையும், மூக்கின் நுகர்தல் வழி வாசனையையும், கண்களால் ஒளியையும், செவியால் ஒலியையும் உணர்கிறோம். இவற்றில் முறையே கண் மற்றும் செவியால் உணரப்படுவதாகிய ஒளியும், ஒலியும் தான் மனிதனால் மிக ஆழமாகவும், விரிவாகவும் வளர்த்தெடுக்கப்பட்டு மாபெரும் கலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. துயரமான முரணாக இந்த இரண்டு புலன்களை மட்டும்தான் மனித இனத்தில் பிறவியிலேயே இழக்கும் சாத்தியத்தை இயற்கை விதித்துள்ளது. பிற மூன்று புலன்களிலும் பிறவிக் குறைபாடு விதிக்கப்படவில்லை.

(நுகர்வு, ருசி ஆகிய உணர்வுகளும் கலையாக மேம்படுத்தப்பட்டாலும் ஒளி, ஒலியின் கலைவடிவங்கள் போன்று மிகவிரிவானவை இல்லை). குர்ஷித், நதீரா தங்களது கண்ணாடி பிம்பங்களை பரிமாறிக் கொள்வதை மனிதரின் இந்த இயற்கைக் குறைபாட்டுடன் புரிந்துகொள்ளும் போது அற்புதமான திறப்பு நிகழ்கிறது. ஒலியும், ஒளியும் ஒன்றை ஒன்று முழுமை செய்து கொள்கிறது. ஆனால் பக்கத்தில் இந்தக் குறைகளற்ற இயற்கையில், தேனீயின் ரீங்காரத்தோடும், பறவையின் இசையோடும் கலந்து அலைகளற்ற அமைதியான குளம் சுற்றியுள்ள அழகை அப்படியே பிரதிபலித்தபடி முழுமையாக இருக்கிறது.

பிறவியிலேயே செவிப்புலன் இல்லாதவர்களுக்கு நிசப்தம் என்ற ஒரு நிலையே தெரியாது, ஏனென்

குர்ஷித்தின் மனதுள் ஒலித்துளியாக விழுந்து பின்னர் பெருகிப் பெருகி மாபெரும் இசைப் பிரவாகமாக பொங்கிப் பரவும் 'ப.ப.ப.பம்ம்...' என்னும் இந்த ஒலிக்குறிப்பு தான் படத்தின் ஆன்மா. படம் முழுவதும் வெவ்வேறு வகையிலாக வந்து கொண்டே இருக்கும் இந்த இசைக் குறிப்பு ஐரோப்பிய செவ்வியல் இசைமேதை பீத்தோவனின் உலகப்புகழ் பெற்ற ஐந்தாவது சிம்.ஃ.பனியின் தொடக்கம். அதைவிட முக்கியமான விஷயம் இந்த சிம்.ஃ.பனியை பீத்தோவன் தனது காதுகேட்கும் திறனை கொஞ்சம் கொஞ்சமாக இழந்த பிறகு இசையமைத்தது என்ற தகவலை அறிந்தால் 'நிசப்தத்தில் பிறந்த இசை' என்பது இன்னும் பொருத்தமானதாக தெரியும். மூன்று குறுகிய ஒலி ('ப.ப.ப'), அதைத் தொடர்ந்து வரும் ஒரு நீண்ட ஒலி ('பம்ம்..') என்னும் இசைக்குறிப்பு தொடர்ந்து இரண்டு முறை இசைக்கப்படுவதுடன் பீத்தோவனின் ஐந்தாம் சிம்.ஃ.பனி ஆரம்பமாகும். நான்கு' கட்டங்களாக ஒருமணி நேரம் நீளும் இந்த சிம்.ஃ.பனியில் ஆங்காங்கே தொடர்ந்து மேற்சொன்ன இசைக்குறிப்பு வந்து கொண்டே இருக்கும். இந்தப் புதுமையான (3+1) தொடக்க இசைக் குறிப்புடன் துவங்கும் பாணிக்காகவே இந்த சிம்.ஃ.பனி மேற்கத்திய செவ்வியல் இசை வல்லுனர்களால் மகத்தான படைப்பாகப் போற்றப்படுகிறது.

இந்தப் புகழ்பெற்ற (3+1) 'ப.ப.ப.பம்ம்..' இசைக் குறிப்பு எழுதுவதற்கு பீத்தோவனுக்கு தூண்டுகோலாக இருந்ததாக இரண்டு விதமான கருத்துக்கள் உண்டு. ஒன்று பீத்தோவனுடைய மனதில் 'விதி வாசல் கதவைத் தட்டும் சத்தம்' என்ற படிமத்தில் இருந்து. இந்தக் இசைக்குறிப்பு கிடைத்ததாக அவரது உதவியாளர் தனது புத்தகத்தில் கூறுகிறார். இன்னொன்று பீத்தோவனின் மாணவர் கூற்றுப்படி அது ஒருவகை மஞ்சள் குருவியின் சத்தத்திலிருந்து தூண்டப்பட்டு உருவானது. இந்தப் படத்தில் 'விதி வாசல் கதவைத் தட்டுதல்' என்னும் படிமமே கையாளப்பட்டுள்ளது. அது வறுமையில் வாடும் ஒரு சிறுவனின் வீட்டு வாசலை விதி தட்டி 'ப.ப.ப.பம்ம்...' என்னும் ஒலி மூலம் அவனுள் இருக்கும் இசையுணர்வைத் தூண்டி, நாளை வரப்போகும் துன்பத்தை நினைக்காமல் இன்று கேட்கும் இசையில் லயித்து, கடைசியில் ஒரு இசைக்கலைஞனாக மாற்றுவதாக படத்தை விவரிக்க மிகப் பொருத்தமானதாகவே இருக்கிறது.

இசை என்ன செய்துவிட முடியும்? என்னும் 'கேள்விக்கு பீத்தோவனின் இசையும், இயக்குனர் மோஹ்சென் மக்மல்பா.ஃ.பின் அனுபவமும் - அதன் விளைவான 'நிசப்தத்தில் பிறந்த இசை' (The Silence) படமும் சாட்சி.

# உத்வேகமும் ஆளுமையும் இருந்தால் எந்த விடயத்திலும் சாதிக்க முடியும்

## வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன்ஸ் சி. ஹரிகரன்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறையில் ஆக்கமும் ஊக்கமும் உள்ள சிறந்த விளையாட்டு வீரனே கல்வியிலும் சாதனையாளனாகத் திகழுவான் சிறந்த விளையாட்டு வீரனால்தான் இலகுவில் எதையும் சாதிக்கின்ற மனோ வலிமை உண்டு.என சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினருமாகிய லயன் சி. ஹரிகரன். தெரிவித்தார்.

இளவாலை புனித யூதாததேயு ஆலய இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட 2013ஆம் ஆண்டிற்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

இளமை, துடிப்பு உத்வேகம், ஆளுமை, புத்தி சாதுர்யம், தலைமைத்துவம், விவேகம், சுறுசுறுப்பு முயற்சி போன்ற பண்புகளை ஒரு மனிதனிற்கு ஏற்படுத்துவன விளையாட்டுக்களே! சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்பவனால் தான் கல்வியிலும் சாதனையாளனாகத் திகழ முடியும்.

ஒரு சிறந்த விளையாட்டு வீரன், தான் எண்ணுகின்ற எந்தக் காரியங்களையும் இலகுவில் நிறை வேற்றிக் கொள்வான். தான். மேற்கொண்ட எந்தக் காரியங்களிலும் வெற்றி காண்பான் நிர்வாகத் துறையென்றாலும் சரி வேறு எந்தத் துறைகளென்றாலும் சரி சிறப்பாக நெறிப்படுத்துகின்ற தலைமைத்துவத்தை இந்த விளையாட்டுக்களே வழங்குகின்றன.

இளமையில் துடிப்பும் உத்வேகமும் கொண்டு சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தால் அவன பிற்காலத்தில் ஒரு கடின உழைப்பாளியாகத் திகழ்வான். மாறாக இளமையில் சோம்பேறித்தனம் கொண்டு இருப்பவர்கள் .முதுமையில் மிகவும் இக்கட்டான நிலைக்கு உட்படுவர்.

இளவாலை புனித யூதாததேயு இளைஞர் மன்றத்தினால் இவ்வாறான ஒரு விளையாட்டு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை இளைஞர்கள் மத்தியில் ஒரு சிறந்த உறவுப்பாலத்தையும் ஒற்றுமையையும் அவர்களின் திறன்களை வெளிப்படுத்துகின்ற ஒரு களமாகவும் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது வரவேற்புக்குரியது என்றார்.

# மக்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது பிரச்சினைகள் தேவைகள் தொடர்பாக தெரிவிக்கும் வகையில் நல்லூர் பிரதேச எதிர்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.ரவீந்திரதாஸனின் அலுவலகம் பொற்பதி சனசமூக நிலையத்திற்கு அருகில் இயங்கி வருகிறது.

மக்கள் தினமும் காலை 9 மணிமுதல் 11 மணி வரையும் மாலை 4 மணிமுதல் 6 மணிவரையும் அலுவலகத்தில் அமைப்பாளரை சந்திக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் இயக்குநர்களுக்கான செயலமர்வு நடைபெற்றபோது யாழ். பிரதேச செயலக கலாசார பேரவை செயலாளர் கந்தவேள் உரையாற்றுவதையும், கலைஞர் ஒருவர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் யாழ். உதவி அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரமுகர்கள் நிற்பதையும் காணலாம். (105)

# சுகதேகிகளாக வாழ வழிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அண்மைக்காலமாக பரவலாக நோய்த்தாக்கத்தால் இறப்பு, துஷ்பிரயோகங்கள் முலமான உடலியல் பாதிப்புக்கள், தற்கொலைகள், தொற்று நோய் பாதிப்பு போன்ற பல சம்பவங்கள் நிகழ்கின்றன. இவை தடுக்கப்படவேண்டும். அத்துடன் இவற்றை தடுப்பதற்கான முயற்சிகள் செயற்திட்டங்கள் முன்னைய காலங்களில் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் முன்னைய காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமையிருந்தமைக்கு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் குறித்து வைத்திய கலாநிதி டாக்டர் தெய்வேந்திரம் சுகதேகிகளாக வாழவழிகள் என்னும் தலைப்பில் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவை வருமாறு:

அண்மைக்காலத்தில் எமது பகுதி மக்கள் நோய்வாய்ப்படுவதும், மரணங்கள் சம்பவிப்பதும் கூடுதலாகக் காணப்படுகின்றது. மற்றும் உளநல பிரச்சினைகள், குடும்ப சமூக காரணிகளால் தற்கொலை மற்றும் உடல்ரீதியான பாதிப்புகள், விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஒரு இனத்தின் நலத்திற்கும் அமைதியான வாழ்க்கைக்கு இவை பாதகமாக அமைகின்றது. இந்நிலை நீடிப்பது நல்லதல்ல. 1977ஆம் ஆண்டு முதல் நானும் துணைவியாரும். வேறு பல இலைமறை காயாகவிருந்து சேவையாற்றிய வைத்தியர்கள் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் மக்களின் முழு பங்களிப்புடன் போர் நடந்த காலத்தில் தேவையற்ற மரணங்கள் ஏற்படாமல்தடுத்தோம். 1977முதல் 2006 வரை அரச சேவையில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியாகவும் பிராந்திய பயிற்சி நிலைய பொறுப்பதிகாரியாகவும் பின் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியாக 1990இல் இருந்து 2004 வரையும் இறுதியில் 2006 வரை பிராந்திய சுகாதார பணிப்பாளராக கடமையாற்றினேன்.

அந்த காலத்தில் பல சுகாதார பிரச்சினைகள் உருவாகினாலும் அவற்றை அக்காலத்தில் கடமையாற்றியவைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் நோய்த் தடுப்பு பிரிவு ஊழியர்களின் முழு ஒத்துழைப்புடன் மக்களின் முழு பங்குடன் ஒரு நல்ல சுகாதார நிலையை நிலைநாட்டினோம். தொற்று நோய்கள் தோன்றினாலும் இரு வார காலத்திற்குள் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

**மேற்குறிப்பிட்ட நிலை எவ்வாறு ஏற்பட்டது என்று பின் குறிப்பிடுவதன் நோக்கம் தற்போது உள்ள துரதிஷ்டவசமான நிலைமை முடிவுக்கு கொண்டு வர உதவுவதாகும்.**

# நோய்த் தடுப்பு சம்பந்தமான சுகாதாரக் கல்வி மக்களிடையே உயர்ந்த நிலையில் இருந்த அடிமட்டசுகாதார வெளிக்கள ஊழியர்கள் வீடு வீடாகவும் பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் கடமை உணர்ச்சியுடன் செயலாற்றினார்கள்.

# இடப்பெயர்வுகள் ஏற்பட்ட பொழுது சுகாதார வசதிகள் பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டது. அதை முறையாக மக்கள் பயன்படுத்தினார்கள்.

# UNICEF மற்றும் ஏனைய NGO உதவியுடன் வீட்டுத்தோட்டம் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. உளநல கலந்துரையாடல் வகுப்புகள் ஆபத்து நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப் பட்டது.

(தொடரும்)

# 2013 புத்தாண்டுப் பலன்கள்



## மீனம்

கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதை உணர்ந்த நீங்கள், அதிகம் தெரிந்திருந்தும் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். உங்கள் ராசிக்கு லாப வீட்டில் செவ்வாய் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் நிர்வாகத்திறன் அதிகரிக்கும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் சுக்கிரன் வலுவாக நிற்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் விரக்தியிலிருந்து விடுபடுவீர்கள். விலகியிருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். குழந்தை இல்லாதவர்களுக்கு வாரிசு உருவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய கடன் தீரும். தடைப்பட்ட கல்யாணம் முடியும். பல வழிகளிலும் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். தாயாரின் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். தாய்வழியில் அனுகூலம் உணடாகும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்களின் உதவி கிடைக்கும். வீடு மாறுவீர்கள். வேற்று இனத்தவர்களின் ஆதரவு கிட்டும். குலதெய்வக் கோயிலை புதுப்பிப்பீர்கள். புது வேலை கிடைக்கும்.

மே 28ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம வீட்டில் நிற்பதால் இலக்கை எட்டிப் பிடிக்க கடுமையாகப் போராட வேண்டி வரும். சுபச் செலவுகளும் திடீர் பயணங்களும் அதிகரிக்கும். ஆனால், பணமும் வரும். லேசான தலைசுற்றல், சலிப்பு, முன்கோபம், சில காரியங்களில் தடைகள் வந்து செல்லும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். மனைவி, பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். மகன் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்க வேண்டி வரும்.

உறவினர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். பூர்வீகச் சொத்துப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். மே 29ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால் மனஉளைசசல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம், மூட்டு வலி, சிறுசிறு அவமானங்கள் வரக்கூடும். தாயாருக்கு உடல் நலம் பாதிக்கும். தாய்வழி உறவினர்களுடன் உரசல்கள் வரும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். கடன் தொல்லைக்கு வருந்துவீர்கள்.

வாகனத்தில் செல்லும்போதும், வீதியை கடக்கும்போதும் கவனம் தேவை. ராசிக்கு 2ஆம் வீட்டில் கேது நிற்பதால் பேச்சில காரம் வேண்டாம். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். பார்வையை பரிசோதித்துக் கொள்ளுங்கள். இரவல் வாங்கவோ, தரவோ வேண்டாம். வெளிநாடு செல்ல விசா தாமதமாக கிடைக்கும். ராசிக்கு 8ஆம் வீட்டில் ராகு நிற்பதால் கணவன் - மனைவிக்குள் சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வந்து போகும்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. வருடம் முடியும் வரை அஷ்டமத்துச் சனி தொடர்வதால் விபத்துகள், ஏமாற்றங்கள், ஈகோ பிரச்சினையால் கணவன்-மனைவி பிரிவு, வீண் பழி, வழக்குகள் வந்து நீங்கும். நீரிழிவு நோய் வர வாய்ப்பிருக்கிறது. தினமும் நடைப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள். ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். முகப்பரு, தோலில் நமைச்சல், கனவுத்தொல்லை வந்து நீங்கும். பெற்றோரை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். உயர் கல்வியை கொஞ்சம் போராடி முடிப்பீர்கள்.

மாணவர்களே! அன்றைய பாடங்களை அன்றே படித்து விடுவது நல்லது. கணிதம், அறிவியல் பாடத்திற்கு கூடுதல் நேரம் ஒதுக்கி படியுங்கள். தேர்வில் மதிப்பெண் உயரும்.

அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! கூட இருக்கும் சிலரே உங்கள் காலை வாரப் பார்ப்பார்கள்.

வியாபாரிகளே! பக்கத்து கடைக்காரரைப் பார்த்து பெரிய முதலீடுகள் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். வேலையாட்களால் பிரச்சினைகள் வரக்கூடும். திடீரென்று அறிமுகமாகுபவர்கள் நயமாகப் பேசுகிறார்கள் என்று நம்பி பெரிய தொகையை கடனாகத தரவேண்டாம். மே மாதம் முதல் கணிசமாக லாபம் உயரும். உணவு, எலெக்ட்ரிக்கல் வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

கலைஞர்களே! புதிய வாய்ப்புகள் வரும். ஒருபுறம் விமர்சனம் இருந்தாலும் மற்றொரு புறம் கடின உழைப்பால் சாதித்துக் காட்டுவீர்கள்.

விவசாயிகளே! பாரம்பரிய முறையிலான விவசாயம் நல்லது. விளைச்சலை அதிகப்படுத்த இயற்கை உரங்களை பயன்படுத்துங்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பதுடன் தன்நிலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய வருடமிது.

## உயர்ரக பொறியியல் முறை மூலம்


# தண்டவாளம் பொருத்தும் நடவடிக்கை

(சிகரம் -கார்த்தி)

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான புகையிரதப் பாதையை நவீன முறையில் மீள்கட்டமைப்பதற்கான பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் ஏற்றுமதிகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நெடுஞ்சாலைகளும், புகையிரதப் பாதைகளும் பல தசாப்த காலமாக புனரமைப்பு செய்யப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டு வந்ததே தவிர அவை மாற்றியமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் பல தசாப்த காலத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்கான நெடுஞ்சாலை மற்றும் புகையிரதப் பாதை நவீன முறையில் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.



அந்தவகையில் வளைவுகளாக இருந்த தண்டவாளங்கள் நேர்த்தியான முறையில் நேராக பொருத்தப்படுவதுடன், தனித்தனித் துண்டுகளாக ஆணி போட்டு பொருத்தாது உயர்ரக மின் பொறியியல் இயந்திரத்தைப் பயன்படுத்தி ஒட்டப்படுகின்றன. இந்தியாவின் தனியார் எந்திரவியல் நிறுவனதால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தப் பணிகள் தற்போது ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்று வருகின்றது.

தண்டவாளங்களை நேராக ஒட்டிப் பொருத்தும் பணிகளுக்கு வீதியிலும் தண்டவாளத்திலும் பயணிக்கக்கூடிய மின் பொறியியல் இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

வேறு உலோகங்களைப் பயன்படுத்தி நாங்கள் தண்டவாளங்களை ஒட்டவில்லை, உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தியே ஒன்றுடன் ஒன்று ஒட்டப்படுகின்றன என இந்தியப் பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றும் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கூறினார். தண்டவாளங்கள் பொருத்தும் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருவதாகவும், யாழ்.கோண்டாவில் பகுதியில் இந்தப் பணிகள் நிறைவடைந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அடுத்தகட்டமாக ஓமந்தையிலிருந்து தண்டவாளம் பொருத்தும் பணிகள் ஆரம்பமாகவுள்ளதாகவும், தண்டவாளத்தைப் பொருத்தும் இயந்திரம் தண்டவாளத்தில் ஓடி ஒட்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## முரசின் இன்றைய பலன்


(16.01.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி தை 03 ஆம் திகதி. நட்சத்திரம் பூரட்டாதி முன்னிரவு 9.04 வரை. திதி பஞ்சமி அமிர்தம் முன்னிரவு 08.08 வரை. இராகுகாலம் 12.35 - 2.05 வரை. சுபநேரம் 5.05 - 06.35வரை. கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சோர்வான மனநிலை. அனுபவசாலிகளின் ஆலோசனை உதவும். பணவரவில் தாமதம். தொழில் இடையூறு விரக்தி. |
| ரிஷபம் | நினைத்த காரியத்தில் தடங்கல். குடும்ப எண்ணத்திற்கு மாறு வேண்டாம். தொழில் மந்தம். குறைந்த பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி. |
| மிதுனம் | குடும்ப காரியங்களில் அதிக ஈடுபாடு. அளவுக்குமீறிய ஆசைகளால் அல்லல். புதியவர்களின் உதவி கிடைக்கும். தொழில் மந்தம். |
| கடகம் | சுயநலம் கருதாமல் செயல்படுவீர்கள். பணிகளில் நேர்த்தி. தொழிலுக்கு தேவையான வசதி. தாராள பணவரவு. மனதில் நம்பிக்கை. |
| சிம்மம் | எதிரிகள் விலகுவர். தொழிலில் புதிய அணுகுமுறைக்குப் பலன். தாராள பணவரவு. குடும்பத்தில் மங்கலநிகழ்வு. விருந்துபசரிப்பு. |
| கன்னி | அறிமுகம் இல்லாதவரிடம் விலகுங்கள். தேவையை விட குறைந்த பணவரவு. உதவிகள் மூலம் சிரமம் தவிர்ப்பீர்கள். சேமிப்பு கைகொடுக்கும். |
| துலாம் | தோல்வியால் உளைச்சல். உணர்ச்சி வசப்பட நேரும். பேச்சில் அவதானம். கடந்த கால அசைபோடுகை. குறைந்த வருமானம். அரசு வகை உதவி. |
| விருச்சிகம் | மனம் விரும்பாதவற்றில் ஒதுங்குதல் நல்லது. முன்யோசனை அனுகூலம் தரும். கூடுதல் உழைப்பு தேவை. திட்டம் ஒன்று நிறைவேறும். |
| தனுசு | போட்டி இருக்கும். எதிர்ப்பு வரும். பேச்சைக் குறையுங்கள். தொழிலில் இருப்பதை பாதுகாப்பது நல்லது. பூர்விக சொத்தால் வருமானம். |
| மகரம் | குறை கேட்கும் சூழ்நிலை வந்து விலகும். நிதானம் நன்மை தரும். பணச்செலவு. வாகன அவதானம். உறவினர் மனக்கிலேசம். குடும்ப உறுதுணை. |
| கும்பம் | புதிய மாற்றம். வசீகரப் பேச்சினால் அன்பை பெறுவீர்கள். தொழிலுக்கு உதவி கிடைக்கும். வரவு திருப்தி. வெளியூரிலிருந்து நல்ல செய்தி. |
| மீனம் | சிரமங்களை வென்று சாதனை. சமூகத்தில் அந்தஸ்து. தொழிலில் அதிக மூலதனம். சராசரி பணவரவு. கடன் வசூலாகும். குடும்பத் தேவைகள் பூர்த்தி. |

## பரமர் சங்கமம்



வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச சாட்டு என்பினம் மாசம் மாசம் சுளை சுளையாச் சம்பளமும், வாங்க வேணும் வேலை செய்யிறேண்டா மெத்தக்கள்ளர்.

கோழி மேச்சாலும் கோண மேந்து! வேலை வேணுமெண்டு இதுக்குத் தான் ஆலாப் பறக்கிறவை நேரத்துக்கு ஓடிப்போய் வரவுக் கொப்பீல பேர் போடுறதுதான் வேலை.

மற்ற நேரமெல்லாம் அதைச்சொல்லி இதைச் சொல்லி சாட்டு விட்டுக் கொண்டு இவ்வொரு கவுண்டராகப் போய் நிண்டு ஊர்க்கதை உளவாரக் கதை அளக்க தேனீர் டைம், சாப்பாட்டு டைம், ஒழுங்காக அந்தந்த வேலை நடக்கும்.

அரச நிறுவனங்களில் தான் இந்தக் காயடிப்புகள் வேறை தனியார், கூட்டுறவு நிறவனங்களில் இவேன்ர பருப்பு வேகாதெல்லோ! அதனால எலெக்சனில நிக்கிறவைக்கு பின்னால திரிஞ்சு ஒரு வேலையைக் கொழுவிப் போடுவினம்.

கடமை, கன்னியம், கட்டுப்பாடு இந்த மூண்டும் ஆருக்கில்லா விட்டாலும் அரசாங்க உத்தியோகத்தனுக்குக் கட்டாயம் இருக்கவேணும் ஆனால் மக்கள் செய்த துரதிஷ்டம் அந்த மூண்டும் அவேட்டை இருக்கிறேல்ல.

மக்களின்ரை வரிப்பணத்தைத்தான் சம்பளம் ஓய்வூதியம் எண்டு உயிரோடை இருக்கும் வரை சுரண்டிக்கொண்டிருக்கினம் அதிலும் உந்த அஞ்சல் திணைக்கள ஊழியர் சொல்லவே தேவையில்லை.

ஆறாம் குறுக்கு வீதியில இருக்கிற மகள் வீட்டு வாசல்லை இறங்கினன். தபால் காரர் ஒரு உறையை நீட்டினார் அது அடப்பன்வீதி விலாசம் போட்டிருந்தது.

இலங்கை வங்கியால் வாடிக்கைக்காரருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமாக இருக்க வேண்டும். விசயத்தை அவரிடம் கூறினேன். அவர்வழமையா இஞ்சைதான் குடும்பதாகவும் குடுங்க அவை அங்கை குடுப்பினம் எண்டு சொன்னார்.

தபால்களை முகவரிக்கு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டியவர் இன்னொருவரிடம் ஒப்படைச்சுச் சென்றால் அந்தக்கடிதம் உரியவருக்குக் கிடைக்குமெண்டு என்ன உத்தரவாதம்?

அந்தத் தபாலூழியர் இரண்டொரு மாதங்களுக்கு முன்பாக என்னுடைய பணிமனை அமைந்துள்ள மவுண்கார்மேல் வீதிப் பகுதிக்கு விநியோகத்தைச் செய்து கொண்டிருந்தது. ஞாபகம் வந்தது.

அப்பவும் என்னுடைய பணிமனையில் அருகிலுள்ள ஒழுங்கை வீட்டுக்கு வரும் இத்தகைய வங்கி தொலைதொடர்பு கடிதங்களை ஒப்படைத்துச்சென்று விடுவார் அதனை அந்த ஒழுங்கையில் இறங்கிக் கொடுக்கப் பஞ்சி.

இத்தகைய ஒருசில ஊழியர்களின் செயற்பாடால் நேர்மையாகப் பணியாற்றும் மற்றைய ஊழியர்களிலும் இந்தக் கறை படிவதைத் தவிர்க்க முடிவதில்லையல்லவா?

இது விடயமாக முன்பும் பரமர் சங்கமத்தில் சொல்லி இருந்தேன். என்னிடமே இந்தக்குற்றவாளிகள் வந்து வலிய மாட்டிக் கொண்டால் என்ன செய்வது சொல்லுங்க பாப்பம்....

# மதுவரித்திணைக்களத்தினால் 377 பேர் மீது சட்ட நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபான குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டதுடன் 377 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரின் அதிரடி சோதனை நடவடிக்கையில் சட்டவிரோதமான மது உற்பத்தி நுகர்வு மற்றும் சிறுவர்களுக்கு மதுபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் விற்ற நபர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட வடமராட்சிப் பிரதேசங்களில் உள்ள கிராமங்கள் தோறும் மதுவரித் திணைக்களத்தினரால் பல்வேறுபட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மதுபானமற்ற கிராமத்தை உருவாக்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலகட்டத்தில் சட்டவிரோத மதுபானக்குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியதுடன் 377 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 13 இலட்சம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

இதேபோல் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 61 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு 65 ஆயிரம் ரூபா மட்டுமே அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி மதுவரித்திணைக்கள புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது.

மேலும் அல்வாய் மேற்கு, திக்கம், கரவெட்டி போன்ற கிராமங்கள் தோறும் மதுவரித்திணைக்களத்தினரால் சட்டவிரோத மது மற்றும் புகையிலைப் பொருட்கள் விற்பனையும், பாவனையும் தொடர்பிலான விழிப்புணர்வுகளையும், கருத்தரங்குகளையும் கடந்த வருடம் முதல் நடத்தியதுடன் மது பாவனையற்ற கிராமத்தை உருவாக்குதல் வேலைத்திட்டத்தில் 16 கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டு அந்தந்த கிராம அலுவலர் சமுர்த்தி உத்தியோகத்தர்களூடாக செயற்படுத்தப்பட்டும் சிறுவர்களுக்கு மதுபானம், புகையிலைப் பொருட்கள் விற்பனை சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனைகளில் இருந்து விடுபட்ட கிராமங்களாக திகழ வழிசமைத்துக் கொடுக்கப்பட்டும் பொது மக்களின் பூரண ஒத்துழைப்பின்மையால் சட்டவிரோத மதுபான குற்றச் செயல்கள் அண்மைக்காலமாக வடமராட்சியிலும் தலைதூக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இந்த நடப்பாண்டிலாவது இளம் சமூகத்தை சமூக கலாசார விழுமியங்களை பேணவும் கலாசார நிகழ்வுகின் ஊடாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் கிராம மட்ட பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் முன்வந்து ஒத்துழைக்கவேண்டும் என பருத்தித்துறை மதுவரித்திணைக்கள அதிகாரி எஸ்.அசோகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (116)

(23) மூவரும் விரும்பும் பழம் எது?
(1) அன்னாசி (2) தோடை (3) அப்பிள்


(24) எவருமே விரும்பாத பழம் எது?
(1) அப்பிள் (2) பப்பாசி (3) ஸ்ரோபரி

❀ அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.

(25)



(26)



(27) **32** இன் அரைப்பங்கின், அரைவாசியுடன் **10** ஐக் கூட்டினால் வருவது
(1) 16 (2) 18 (3) 22

(28) **12** ஐ **3** ஆல் பெருக்கி வரும் விடையுடன் மூன்றைக் கூட்டினால் கிடைப்பது.
(1) 36 (2) 39 (3) 41

❀ பின்வரும் பெட்டியினுள் தரப்பட்டுள்ள சொற்களில் ஒரு சொல் மட்டும் வேறுபட்டது. அச்சொல்லைக் கொண்ட பெட்டியை மட்டும் தெரிவு செய்க.

(29)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| • வட்டம்<br>• சதுரம்<br>• முக்கோணி<br>• செவ்வகம் | • மங்கை<br>• பெண்<br>• கோதை<br>• காரிகை | • குதிரை<br>• வேழம்<br>• புரவி<br>• அசுவம் |

(30)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| • கொழும்பு<br>• மாத்தறை<br>• தமிழ்நாடு<br>• காலி | • சிவப்பு<br>• பச்சை<br>• மஞ்சள்<br>• நீலம் | • கழுகு<br>• ஆந்தை<br>• ஆலா<br>• ராஜாளி |



## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை


# கல்வி முரசு




முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

மூன்று அடைப்புக்களிலுள்ள உருக்களில் இரு அடைப்புக்களிலுள்ள உருக்கள் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. எந்த அடைப்பிலுள்ள உருக்களிடையே எந்தவித தொடர்பும் இல்லை. அந்த அட்டையைத் தெரிவு செய்க

1)




2)



கீழே தரப்பட்டுள்ள உருக்களுடன் தொடர்புபடாத சொல் எது?

3)  1) வெயில் 2) மழை 3) குளிர்

4)  1) தகவல் தொடர்பாடல் 2) செய்தி 3) விளையாட்டு


வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

5) தேன் போல் இனியன சொல்ல வேண்டும்.
தென்னை போல் நன்றி காட்ட வேண்டும்
மான்போல் மானம் உணர வேண்டும்.
மாடு போல் என்றும் .................... வேண்டும்.
(1) கதற (2) உழைக்க (3) பால் தர


6) பெரிய பாறை உடைக்கிறார்
பெருந் தெருக்கள் அமைக்கிறார்.
உரிய முறையில் பாதையிலே
எத்தனை வாகனம் ..................
(1) சொல்லுது பார் (2) நிற்கிறது (3) ஓடுகிறது

பின்வரும் தகவல்களை வாசித்து விளங்கி விடை தருக.





7)  ஆகியவற்றின் விலை எவ்வளவு?

1) ரூபா 50 2) ரூபா 60 3) ரூபா 75

(8)  ஆகியவற்றின் விலை எவ்வளவு?

1) ரூபா 50 2) ரூபா 40 3) ரூபா 35

9) ஒரே விலையை உடைய பழங்கள் இரண்டும் எவை?



1) 2) 3)


10)

| | | |
|---|---|---|
| 4 | 2 | 1 |
| 1 | □ | 4 |
| 5 | □ | 5 |

வெற்றிடத்தினுள் வரவேண்டிய எண்கள் எவை?

1) $\frac{5}{6}$ 2) $\frac{2}{4}$ 3) $\frac{3}{6}$

பெட்டியினுள் தரப்பட்டுள்ள எண்கள், உருக்கள், ஆங்கில எழுத்துக்கள் என்பவற்றை அவதானித்து விடை தருக.




(11) பெட்டியினுள் அதிக தடவைகள் வருவது எது?
(1) □ (2) A (3) 2

(12) பெட்டியினுள் காணப்படாதவை எவை?
(1) 6 , D (2) ◯ , 1 (3) E , 9

(13) பெட்டியினுள் முறையே 4 தடவைகள் காணப்படுபவை எவை?
(1) △ , 2 (2) A , 3 (3) △ , 3

(14) **20** மாம்பழங்களை **5** சம பங்குகளாக பிரித்தால், ஒரு பங்கிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?
(1) 4 (2) 5 (3) 6

(15) நாங்கள் அண்ணன் தம்பிகள் ஐந்து பேர். எங்களிடையே 30 பழங்களைச் சமமாக பங்கிடப்பட்டால் ஒருவருக்கு எத்தனை பழங்கள் கிடைக்கும்?
(1) 4 (2) 5 (3) 6




16) 2012 ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனில், இம்மாதம் 31 ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்


※ பின்வரும் கோலத்தை அவதானித்து வெற்றிடத்தினுள் வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்யுங்கள்.

(17)




(1) 22
(2) 24
(3) 26

(18)




※ பின்வரும் ஆங்கில எழுத்துக்களால் வகை குறிக்கப்படும் இலக்கங்களைப் பயன்படுத்தி விடை தருக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| K | L | M | N | O | P | Q | R | S | T |

(19) OPKK எனும் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் எண் எது?
(1) 5400 (2) 4500 (3) 4600

(20) MOO − LMN இந்தக் கணிதச் செய்கையின் பெறுமானம் எவ்வளவு?
(1) 367 (2) 221 (3) 121

(21) POKP + MRT ஆகியவற்றின் கூட்டுத்தொகை எவ்வளவு?
(1) 8195 (2) 6684 (3) 5684

(22) அனுலாவிலும் **7** வயது குறைந்தவன் சனுஜன். சனுஜனை விட **2** வயது மூத்தவன் குரு. குருவின் வயது **12** எனில், அனுலாவின் வயது எத்தனை?
(1) 10 (2) 12 (3) 17

※ பின்வரும் தகவலை வாசித்து விடை தருக.

கமலா அப்பிளையும், தோடையையும் விரும்புவாள். ஆனால் அன்னாசியை விரும்பமாட்டாள். குசும் தோடையையும், அன்னாசியையும் விரும்புவாள். ஆனால் பப்பாசிப்பழத்தை விரும்பமாட்டாள். காசிம் பப்பாசியையும் தோடையையும் விரும்புவான். ஆனால் அப்பிளையும் ஸ்ரோபரியையும் விரும்பமாட்டான்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதியுங்கள் பாகிஸ்தானிடம் இந்தியா வேண்டுகோள்




இரு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டும் என்று பாகிஸ்தானை இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையே சக்கன் டாக் பாக் என்ற இடத்தில் நேற்று பேச்சு வார்த்தை நடை பெற்றது.


சுமார் 20 நிமிடங்கள் நீடித்த இந்த பேச்சுவார்த்தையில், இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய இராணுவ அதிகாரி லெப்டினட் ஜெனரல் ஓம் பிரகாஷ், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நிலைமை முழு கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன் ஒரு பகுதியாக, இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே நேற்று பேச்சுவார்த்தை நடந்ததாகவும் அவர் கூறினார்.




# தமிழர்களின் வீர விளையாட்டு மதுரையில் நேற்று ஆரம்பம்



மதுரை அவனியாபுரத்தில் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.


இந்த போட்டியில் மதுரை, சிவகங்கை உள்ளிட்ட ஊர்களில் இருந்து 300 காளைகள் பங்கேற்றுள்ளன.

வீரர்கள் போட்டிப்போட்டுக் கொண்டு காளைகளை அடக்கி வருகின்றனர்.

இந்த போட்டி உச்சநீதிமன்ற விதிமுறைகளை பின்பற்றி நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே பார்வையாளர்கள் அமர்ந்திருக்கக்கூடிய மேடை ஒன்று சரிந்து விழுந்ததால் சிலருக்கு காயமேற்பட்டிருக்கிறது.

இதனால் தற்காலிகமாக அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# டில்லி மாணவி வல்லுறவு வழக்கின் 6 ஆவது குற்றவாளி சிறுவன்தானா?

புதுடில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி வல்லுறவுச் சம்பவத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 குற்றவாளிகள் சிறையிலும், 18 வயதை அடையாதவன் என்பதால் 6 ஆவது குற்றவாளி சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலும் அடைக்கப்பட்டுள்ளான்.

6 ஆவது குற்றவாளி சிறுவன் தானா? என்பதை உறுதிப்படுத்த, அவன் படித்த ஆரம்பப் பள்ளியின் தலைமையாசிரியர் இளம் சிறார் குற்றவாளிகளுக்கான நீதிபதியின் முன்பு ஆஜராகி வாக்குமூலம் அளிக்க உள்ளார்.

இந்நிலையில் படவுன் மாவட்டம் பவானிபூரில் வசிக்கும் 6 ஆவது குற்றவாளியின் தாயார் நிருபர்களிடம் கூறியதாவது: எனக்கு 6 குழந்தைகள், எனது மூத்த மகன் 11 வயதில் வேலை தேடி டில்லிக்கு போனான்.

ஆரம்பத்தில் சில மாதம் 600 ரூபாய் பணம் அனுப்பினான். 3 வருடங்களாக அவனிடம் இருந்து பணமும் வரவில்லை. அவனைப் பற்றிய எந்த தகவலும் இல்லை.

அவன் உயிருடன் இருக்க மாட்டான் என்று தான் நாங்கள் நினைத்தோம்.

ஆனால், திடீரென்று டில்லி பொலிஸார் எங்கள் கிராமத்துக்கு வந்து அவனைப் பற்றி விசாரித்தபோது திகைத்துப் போனோம்.

அதிலும், அவன் செய்த குற்றம் பற்றி அறிந்த பின் அவமானத்தால் தலைகுனிந்து வாழும் நிலைக்கு எங்கள் குடும்பம் ஆளாகியுள்ளது.

அவன் செய்த தவறுக்கான தண்டனையை அவன் அனுபவித்தே தீர வேண்டும் என அவர் கூறினார்.

# சேவை வரி வழக்கிலிருந்து நடிகை கத்ரீனா விடுவிப்பு



நடிகை கத்ரீனா கய்ப் சேவை வரி செலுத்தாதது தொடர்பான வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொலைக்காட்சி விளம்பரங்களில் நடித்ததற்கு நடிகை கத்ரீனா, சேவை வரி செலுத்தவில்லை எனக்கூறி அவருக்கு எதிராக மத்திய சேவை வரித்துறை சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

இதற்கான அபராதம் மற்றும் வட்டியுடன் சேர்த்து 2.79 கோடி ரூபாவை கத்ரீனா செலுத்த வேண்டும் என சேவைத் துறை அதிகாரிகள் உத்தரவிட்டனர். இது தொடர்பான வழககு மும்பையில் உள்ள சுங்கம், கலால் மற்றும் சேவை வரித் துறை தீர்ப்பாயத்தில் நடந்தது. இந்நிலையில் கத்ரீனா சார்பில் மனுத் தாக்கல் செய்யபட்டது.

அதில் கூறப்பட்டதாவது: இந்த விவகாரத்தில் எனக்கான வரியை செலுத்துவதற்காக மேட்ரிக்ஸ் என்ற நிறுவனத்தை ஏஜென்ட்டாக நியமித்திருந்தேன்.

அந்த நிறுவனம் நான் செலுத்த வேண்டிய வரியை செலுத்தி விட்டதாக தற்போது தெரிவித்துள்ளது.

எனவே இந்த வழக்கிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் என அந்த மனுவில் கத்ரீனா கூறியிருந்தார்.

இதையடுத்து கத்ரீனா மீதான சேவை வரி வழக்கை சேவை வரி நீதிமன்றம் இரத்துச் செய்வதாக அறிவித்தது.

# உலகின் மிகப்பெரிய திருவிழா மஹா கும்பமேளா தொடங்கியது

உலகின் மிகப்பெரிய மக்கள் ஒன்று கூடல் என்று கருதப்படும் கும்பமேளா நேற்றுமுன்தினம் கங்கையும் யமுனை நதியும் அலகாபாதில் சங்கமிக்கும் இடத்தில் தொடங்கியது.

பல நாட்கள் நடைபெறும் இந்த மத விழாவில் பத்து கோடிக்கும் அதிகமான மக்கள் அங்கு புனித நீராடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இத் திருவிழாவின் முதல் நாளான நேற்றுமுன்தினம் மட்டும் ஒரு கோடி பேர் அலகாபாத் சங்கமத்தில் நீராடியிருப்பார்கள்.



வட இந்தியாவில் கடும் குளிர் நிலவும் போதிலும், ஆயிரக்கணக்கான சாதுக்கள் உட்பட இலட்சக்கணக்கான மக்கள் அப்பகுதியில் நீராடத் திரண்டிருந்தனர்.

உடல் முழுவதும் திருநீரு பூசியபடி மலர் மாலை மட்டுமே அணிந்த நிர்வாண நாகா சாதுக்கள் இங்கு புனித நீராட வருவது, கும்பமேளாவின் போது மறக்க முடியாத ஒரு நிகழ்வாக கருதப்படும் என செய்தியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

வண்ணமயமான ஒரு ஊர்வலத்தில் வந்த நிர்வாண நாகா சாதுக்கள் மந்திர உச்சாடனங்களைச் செய்தவாறே கங்கை யமுனை சங்கமத்தில் குதித்து நீராடினர். கும்பமேளா காலத்தில் சங்கமத்தில் குளித்தால் தமது பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்று இந்துக்கள் நம்புகிறார்கள்.

## சிறிதரன்...

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பின்னர் கூறியிருப்பது போன்று, இவை எல்லாமே இட்டுக்கட்டிய நாடகம்தான் என்றால், சட்டத்தின் முன் இந்த விவகாரம் எடுத்துக் கொள்ளப்படும்போது அதை நிரூபிப்பதற்கு அவருக்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன.

ஆக, இங்கே பிரச்சினை சிறிதரனோ, அவரது அலுவலகமோ, அங்கு கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பொருள்களோகூட கிடையாது. மாறாக, இந்த விடயம் தொடரபாக நமது செய்தி ஊ(ட)கங்கள் நடந்துகொண்ட விதம், செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள்மீது அவர்கள் மேற்கொள்ள முயன்ற அவதூறுப் பிரசாரம் எல்லாமே, இந்த விடயத்தைவிட, இந்த ஊ(ட)கங்களை நடத்துவோரின் ஊடக அறிவு தொடர்பான கேள்விகளையே அதிகம் எழுப்புகின்றன.

அல்லது, உண்மைகள் தெரிந்தும், அவற்றை அறிந்து கொள்ள முயலாது இருந்த இடத்தில் இருந்துகொண்டு தாம் சொல்ல விரும்பியதையே உண்மையாகத் திரித்துக் 'கதை விடும்' ஊ(ட)க வியாபாரத் தந்திரமாகவே இது கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

இரணைமடு குளத்து நீர் விவகாரத்தை இராணுவ அரசியல் பூதாகரமாக்கியது, இராணுவத்தில் இணைந்துகொண்ட தமிழ்ப் பெண்கள் விவகாரத்தை பாலியல் விவகாரமாக்கியது என்று இதுவே இவர்களது ஊ(ட)க வழக்காக இருந்து வருகிறது. சரி, இவர்கள் ஏன் இப்படிச் செயற்படுகிறார்கள்? இதற்கான காரணம் என்ன?

தமிழ் ஊடகவியல் ஏன் வெறும் ஊ(ட)க அரசியலாக மாறியது? இவைபற்றித் தொடர்ந்து பார்க்கலாம்.

# இந்திய இராணுவ தினம் நேற்று கொண்டாடப்பட்டது



ஆண்டுதோறும் ஜனவரி 15 ஆம் திகதி இந்திய இராணுவ தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

நேற்று கொண்டாடப்பட்ட 65 ஆவது இராணுவ தினத்தில் இந்திய இராணுவத்தின் சார்பில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் நினைவாக இந்தியா கேட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அமர் ஜவான் ஜோதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இராணுவ அணிவகுப்புக்கள், இராணுவ சாகசங்கள் ஆகியவற்றுடன் இராணுவத்தின் தொழில்நுட்பங்கள், சாதனைகள் குறித்தும் நிகழ்ச்சிகளும் டில்லி கன்டோன்மன்ட் பகுதியில் நடைபெற்றது.

இந்தியா எல்லைப் பிரச்சினைகள் தொடர்பாக சீனாவுடன் ஒரு தடவையும் பாகிஸ்தானுடன் இரண்டு தடவைகளும் போரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிணைக்கைதியை மீட்கும் பிரான்ஸின் முயற்சி

## வெறுங்கையோடு நாடு திரும்பிய அதிரடிப்படை




சோமாலியா நாட்டில், மூன்று ஆண்டுகளாக, பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியிருந்தவரை மீட்க, பிரான்ஸ் அதிரடி படையினர் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியில் முடிந்தது. ஆப்ரிக்க நாடான, சோமாலியாவில், 'ஷெபாப்' என்ற பயங்கரவாத அமைப்பினர் உள்ளனர். 2009இல், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த, டெனிஸ அலெக்ஸ், என்பவரை இவர்கள் பிணைய கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இவரை விடுவிக்க, பிரான்ஸ அரசு, பேச்சுவார்த்தைக்கு பல முறை அழைப்பு விடுத்தும், பயங்கரவாதிகள் மறுத்து விட்டனர். பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ள,அலெக்ஸ்,மோசமாக நடத்தப்படுவதை அறிந்த, பிரான்ஸ் அதிரடிப்படையினர், அவரை மீட்கத் திட்டமிட்டனர். பயங்கரவாதிகள் மறைந்திருந்த பகுதியை அறிந்து கொண்ட, பிரான்ஸ் அதிரடிப்படையினர், வான்வழி தாக்குதலை நடத்தினர். இதில், பயங்கரவாதிகள், 17 பேர் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகள் பதில் தாக்குதல் நடத்தியதில், பிரான்ஸ் வீரர்கள், இரண்டு பேர் பலியாயினர். எனினும் இந்த நடவடிக்கையில், பிணைய கைதி அலெக்சை மீட்க முடியாமல், அதிரடிப் படையினர் வெறுங்கையோடு, தாயகம் திரும்பினர். பலியான பிரான்ஸ் வீரர்களின் உடலை தர மறுத்த பயங்கரவாதிகள், அலெக்சையும், இரண்டொரு நாளில் கொல்லப்போவதாக மிரட்டியுள்ளனர்.

# எகிப்தில் இராணுவ ரயில் தடம் புரண்டதில் 15 பேர் பலி



எகிப்தில் இராணுவ ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் பலியானார்கள், 103 பேர் காயமடைந்தனர்.

எகிப்தில் இராணுவத்திற்கு சொந்தமான ரயில் கெய்ரோவிலிருந்து பக்கத்து ஊரான பத்ரஸினுக்கு சென்ற போது எதிர்பாராத விதமாக தடம் புரண்டது.

இந்த விபத்தில் 15 பேர் பலியானார்கள், 103 பேர் காயமடைந்தனர் என அந்நாட்டு சுகாதார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் பலியான நபர்கள் குறித்து உடனடி தகவல் ஏதுமில்லை என்றும், ரயில் போக்குவரத்து சாலை மிக மோசமாக இருந்ததே இதற்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ரயிலில் அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு பயிற்சிக்காக இராணுவ இளைஞர்கள் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய விமானத்தாக்குதல் 20 குழந்தைகள் பலி



சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதியில் இராணுவ விமானங்கள் நடத்திய தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 13பேர் கொல்லப்பட்டனர். சிரியாவில் அதிபர் பஷார் அகமதுவுக்கு எதிராக கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்கள் பல முக்கிய பகுதிகளை கைப்பற்றியுள்ளனர். அவற்றை மீட்கும் விதமாக இராணுவம், விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.

துருக்கி எல்லையில் உள்ள ஒரு சந்தையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 8 குழந்தைகள் உள்ளிட்ட 20 பேர் கொல்லப்பட்டனர். 99 பேர் காயமடைந்துள்ளனர். அதே வேளை, கடந்த சில நாட்களில் மட்டும் 20 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலகிலேயே ஊழல் மலிந்த நாடு அமெரிக்காதான் சீனா அல்ல!

## ஜாக்கிசான் சீற்றம்




சமீப காலமாக அமெரிக்க பத்திரிகைகள் சீனாவையும், அதன் தலைவர்களையும் இகழ்ந்து செய்திகள் வெளியிட்டு வருகின்றன. சீனாவில் ஊழல் மலிந்து விட்டது. அந்த நாட்டின் பிரதமர் வென்ஜியா பாவோ உள்ளிட்ட தலைவர்கள் ஊழல் மூலம் சொத்துக்களை குவித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது நடிகர் ஜாக்கிசானுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் இவர் சீனாவில் உள்ள ஹாங்காங்கை சேர்ந்தவர். அவர் சீனாவின் போனிஸ் டி.வி.க்கு அளித்த பேட்டியில் உலகிலேயே ஊழல் மலிந்த நாடு அமெரிக்காதான். சீனா அல்ல. இங்கும் ஊழல் பிரச்சினை உள்ளது. அதை ஏற்று, கொள்கிறேன். அமெரிக்கா உள்ளிட்ட மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது சீனாவில் குறைவு தான் என்றார். மேலும் அவர் கூறும்போது, சீனர்கள் தங்களை மட்டுமே விமர்சனம் செய்வார்களே தவிர வெளிநாட்டினரை அல்ல. அந்த வகையில் எங்கள் நாடு மிக சிறந்தது என்றும் அவர் கூறினார்.

உலகச் செய்திகள்

# மாலியில் பிரான்ஸின் விமானத் தாக்குதல் அமெரிக்காவும் புலனாய்வு உதவி!



மாலியில், பயங்கரவாதிகளை ஒடுக்க, பிரான்ஸ் நாட்டு படைகள், வான்வழி தாக்குதலை நடத்துகின்றன. ஆப்ரிக்க நாடான மாலியில், அல் குவைதா ஆதரவுடன் செயற்படும், பயங்கரவாதிகள், கயோ உள்ளிட்ட நகரங்களை கைப்பற்றினர். இந்த பயங்கரவாதிகளை சமாளிக்க, மாலி அரசு, பிரான்ஸ் நாட்டின் உதவியை நாடியது. இதையடுத்து, கடந்த வாரம், மாலிக்கு விரைந்த பிரான்ஸ் படைகள், விமானம் மூலம் குண்டு வீசி, பயங்கரவாதிகள் கைப்பற்றிய பகுதிகளை மீட்டன. இந்தத் தாககுதலில், 100க்கும் அதிகமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தற்போது மாலியில் அவசரநிலை அமுலில் உள்ளது. பயங்கரவாதிகள், மீண்டும் அரசு படைகள் மீது தாக்குதலை தொடங்கியுள்ளதால், அவர்கள் பதுங்கியுள்ள இடங்கள் மீது, பிரான்ஸ் படைகள், பதிலடித் தாக்குதலை நடத்தி வருகின்றன. அதேவேளை இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவும் புலனாய்வுத் தகவல்களை அளிக்க முன்வந்துள்ளது.

# அமெரிக்காவில் சக்கை போடு போடும் ஒசாமா பின்லேடன் திரைப்படம்

சர்வதேச அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்த திரைப்படம் அமெரிக்காவில் சக்கை போடு போடத் தொடங்கியுள்ளது. அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன், அமெரிக்க படையினர் கடந்த 2011ஆம் ஆண்டு மே மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் குறித்த நிகழ்வுகளை Kathryn Bigelow என்பவர், Zero Dark Thirty என்ற பெயரில் படமாக தயாரித்துள்ளார்.

இப்படம் அமெரிக்காவிலும், கனடாவில் பாக்ஸ் ஆபிஸில் முதலிடத்துக்கு வந்துள்ளது. படம் வெளியான மூன்று நாட்களுக்குள் உலகளாவிய ரீதியில் 24 மில்லியன் டொலர்களை சம்பாதித்துள்ளது. மேலும் கடும் விமர்சனத்திற்கு உள்ளான இப்படம், எதிர்வரும் 25ஆம் திகதி இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உற்சாகத்தை அளிக்கும் சிவப்பு



பிரிட்டனில் உள்ள பிரிட்டிஷ் ஹார்ட் ஃபவுண்டேஷன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களிடம் நிறம் பற்றி எடுத்த கருத்துக கணிப்பில் ஐந்தில் மூன்று பேர், சிவப்பு தங்களுக்கு அதிக நம்பிக்கை யூட்டுவதாகத் தெரிவித்தனர்.

தங்களின் சக பணியாளர்கள் குட்டைப் பாவாடை, கழுத்து இறங்கிய மேல் உடுப்பு, குட்டையான கால் சட்டை போன்றவற்றை அணிந்து வந்தால் அதை பெண்கள் வெறுக்கின்றனர்.

இந்தக் கணக்கெடுப்புக்குப் பின்பு சுகாதாரப் பிரச்சினைகளை வலியுறுத்தி பெப்ரவரி முதல் நாளன்று பணியாளர்கள் செந்நிற உடை உடுத்தி வரும்படி பிரிட்டிஷ் ஹார்ட் ஃபவுண்டேஷன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த அறக்கட்டளையின் நிதிதிரட்டும் இயக்குனர் 2013ஆம் ஆண்டில் பணித்தளத்தில் ஒருவர் பாதுகாப்பாகவும் உற்சாகமாகவும் பணிபுரிய உதவும் வண்ணம் சிவப்பு மட்டுமே என்பது தெளிவாகின்றது என்றார்.

# ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து செயற்பட கூட்டமைப்பு உறுப்பினர்கள் தயார்

## பருத்தித்துறை பிரதேசசபை துணைத் தவிசாளர் கூறுகிறார்

யுத்தத்தால் அழிவடைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக அயராது பாடுபடும் ஈ.பி.டி.பி.யுடன் தோளோடு தோள் கொடுத்து இணைந்து செயலாற்ற நாம் தயாராகவுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் லோகசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் கழகத் தலைவர் க.அகில்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) மெய்வன்மை நிகழ்வுகளின் ஊடாக ஆக்கமும் ஊக்கமும் மிக்கதொரு சமூகத்தை கட்டியெழுப்ப முடிகின்றது. விளையாட்டு நிகழ்வுகள் மனதை ஒருநிலைப்படுத்துவதுடன் ஆக்கமும் நிறைந்த இளையோர் சமுதாயத்தை உருவாக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழல் காரணமாக எமது இளைய சமுதாயத்தின் செயற்பாடுகளை ஓர் வரையறையுடனேயே மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது ஆனால் தற்போதுள்ள இயல்புச் சூழலில் சுதந்திரமாக எமது செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதொரு நிலையேற்பட்டுள்ளது. இந்த இயல்புச் சூழலை தமது அரசியல் சுயலாபத்திற்காக குழப்பியடித்து மீண்டுமொரு அவசர காலநிலையை ஏற்படுத்த சிலர் முயலுகின்றனர். இவ்வாறானதொரு நிலை மீளவும் ஏற்படாது இருக்க இளையோரின் ஒட்டுமொத்த பங்களிப்பு அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உள்ளிட்ட அதிதிகள் வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## யாழ் - கொழும்பு...

ஏற்பாடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு பேருந்து உரிமையாளர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் தல்லமையில் தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் மேற்படி விடயம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணம் - கொழும்பு தனியார் போக்கு வரத்து சேவைகளின் போது தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் அமைச்சரிடம் விரிவாக எடுத்து விளககினர். இவற்றைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகல பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகளை உள்ளடக்கியவாறு கோரிக்கை மனுவொன்றினை தமக்கு சமர்ப்பிக்குமாறும் குறித்த விடயம் தொடர்பாக விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கும் அதேவேளை, ஜனாதிபதியுடனும் மற்றும் துறைசார்ந்த அமைச்சுடனும் கலந்துரையாடி விரைவில் சாதகமான இறுதி முடிவை எட்டப்படுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

அத்துடன், யாழ்ப்பாணம் - கொழும்பு மார்க்கத்தில் மட்டுமல்லாது நாட்டின் ஏனைய பகுதிகளிலுமுள்ள நடைமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டார். இதனிடையே யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் செயற்குழு உறுப்பினர்களுடனும் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், அவை தொடர்பிலும் துறைசார்ந்தோர் ஊடாக உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் உறுதிபடத் தெரிவித்தார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் புத்ததாஸ, உள்ளிட்டதுறை சார்ந்தோர் உடனிருந்தனர்.

# வெள்ள அபாயத்தில் சிக்கியுள்ளது தும்பளை கிழக்கு கிராமம்

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட தும்பளை கிழக்குப் பகுதிக் கிராமத்திற்கு வடிகால் அமைப்புச் செய்து கொடுக்கப்படாமையால் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நின்று வீடுகளுக்குள் செல்வதால் குறித்த பகுதி மக்கள் இடம்பெயரும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழை காலம் தொடங்கிவிட்டால் தும்பளை, மாதனை முதலான கிராமங்களுடாக ஊடறுத்துப் பாய்கின்ற வெள்ளம் தும்பளை கிழக்குப் பகுதி கிராமத்தில் தாழ்வான வீடுகளில் ஓரளவு வெள்ளம் தேங்கி நிற்பதுண்டு இதனை அப்பகுதியில் பெரும்பாண்மையாக வசிக்கும் மீனவ சமூகத்தினர் ஒன்றிணைந்து இதனை வாய்க்கால் வழியாகக் கடலுக்கு வெட்டிவிட்டு வந்தனர்.

ஆனாலும் பருத்தித்துறை நகரசபையின் கண்காணிப்பின் கீழ் தும்பளை கிழக்கு பீச் றோடடிற்கு வெள்ள வடிகால் அமைப்பைக் கருத்தில் கொள்ளாது உயர்த்தி சீமெந்தினாலான வீதியை பல இலட்சம் செலவில் அமைத்துக்கொடுத்துள்ளது. இதனால் மழை காலத்தில் குறித்த கிராமங்களின் ஊடாகச் செல்லும் வெள்ளம் கடலுக்குச் செல்லமுடியாமல் தேங்கி நின்று வீடுகளுக்குள் செல்வதனால் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருகின்ற நிலைமை உருவாகியுள்ளது என பாதிக்கப்பட்ட மக்கள் விசமனடைந்துள்ளனர்.

இவ்வாறு பருத்தித்துறை நகரசபையின் வடிகால் அமைப்பைக் கருத்தில் கொள்ளாத செயற்பாட்டினால் மழை காலத்தில் தும்பளை கிழக்கு உதய சூரியன் சனசமூக எல்லைக்குட்பட்ட பகுதி முத்துமாரி அம்மன் கோவிலடி மற்றும் எல்லை ஒழுங்கை போன்ற வீதியோர தாழ்வான நிலப்பரப்பில் வாழ்ந்து வரும் மக்களே இவ்வாறான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் அண்மையில் பெய்த அடை மழை காரணமாக சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் மேட்டுநில உறவினர் வீடுகளிலும் உதயசூரியன் சனசமூக நிலையத்திலும் இரண்டு நாட்களாகத் தங்கியிருந்தனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை பருத்தித்துறைப் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவினராலும் பருத்தித்துறை நகரசபையின் எதிர்க் கட்சியினராலும் வழங்கப்பட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிக் கிராமங்களில் அள்ளப்படும் குப்பைகளைத் தும்பளை கிழக்கு மூக்கம் கடற்கரைப் பகுதியில் கேட்பார் அற்று குப்பைகளைக் கொட்டிவந்ததுடன் அப்பகுதி மக்களின் எதிர்ப்பின் மத்தியிலும் போராட்டத்தின் மத்தியிலும் நகர சபையினர் தலை குனிந்து விட்டுச் சென்ற சம்பவமும் நடந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

கொட்டப்பட்ட குப்பைகள் அகற்றப்படாமையினால் அண்மையில் பெய்த மழை வெள்ளத்தில் இவை மிதந்து குறித்த கிராம வீடுகளுக்குள்ளும் புகுந்து சுகாதாரமற்ற நிலை ஏற்பட்டதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி இம்மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினை தொடர்பில் பருத்தித்துறை நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரான சிவமுகுந்தனிடம் எமது செய்தியாளர் தொடர்புகொண்டு கேட்டபோது தும்பளை கிழக்கு வாழ்மக்கள் காலம் காலமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வந்தபோதிலும் வடிகால் அமைதது்க்கொடுக்க வேண்டும் என்ற பிரேரணையைச் சபையில் கொண்டுவந்தேன். அது ஆளும் கூட்டமைப்பின் அதிகாரத்தில் உள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருந்தும் ஒன்றரை வருடமாகியும் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளப் படாமையினால் அம்மக்கள் பல இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் அம்மக்கள் கஷ்டப்பட்ட போதிலும் அம்மக்களின் நலனில்கூட அக்கறை செலுத்தவில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி இப்பகுதி மகக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினை தொடர்பில் அமைச்சர் டகளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக்கொண்டு சென்று நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (116)

## புதிய பிரதம...

என்று குற்றஞ்சாட்டியே ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் "மோசடிகளுக்கு எதிரான குரல்" என்ற அமைப்பின் இணைப்பாளருமான வசந்த சமரசிங்கவினாலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழு...

இரத்துச் செய்யக்கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சில பொது அமைப்புக்களால் ஏழு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிந்தன. எனினும் அதனையும் மீறி ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்டு, புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டமையை அடுத்தே ஏழு வழக்குகளும் மனுதாரர்களால் மீளப்பெறப்பட்டுள்ளன.

## புதிய ...

நியமனம பெற்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உறுதியளித்தார்.

சர்வமதத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கொழும்பு, புதுக்கடையிலுள்ள உயர் நீதிமன்றத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றதை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டுக்காக கடமையாற்ற வேண்டும். நாட்டின் நலனுக்காக கடமையாற்ற வேண்டும். இலங்கைக்காக கடமையாற்ற வேண்டும் என்ற விடயத்தை நாம் அனைவரும் எப்போதும் மனதில் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## எனது உயிருக்கு...

நீதிமன்றத்தில் கடமையாற்றினேன். ஆனால் தற்போது காட்டுமிராண்டித் தனமாக தூக்கியெறியப்பட்டுள்ளேன். காலம், இயற்கை ஒருநாள் பதில் சொல்லும். இதுவரை காலமும் எனக்கு உதவிய சகலருக்கும் நன்றிகூற விரும்புகின்றேன். மேலும் எனது பாதுகாப்பு குறித்து சந்தேகமாகவே உள்ளது. இதனால் பாதுகாப்பை பொது மக்களிடம் ஒப்படைக்கின்றேன் என்றார்.

அதேவேளை சட்டப்படியாக நான்தான் இன்னமும் இந்த நாட்டின் பிரதம நீதியசர் என்று ஷிராணி பண்டார்நாயக்க தெரிவித்துள்ளார். எனினும் நான் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அல்லது அலுவலக அறையில் தொடர்ந்தும் இருப்பேனானால் வன்முறைகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இப்போது தென்படுவதால் சட்டத்தரணிகள் மற்றும் விசுவாசமான சாதாரன பிரஜைகள் உட்பட்ட அப்பாவி பொதுமக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதால் நான் எனது உத்தியோகபூர்வ வாஸஸ்தலத்திலும் அலுவலக அறையில் இருந்தும் வெளியேறும் நிலைக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளேன் என்று இலங்கையின் 43 ஆவது தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் புதிய தலைமை நீதியரசராக மொஹான் பீரிஸ் நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னால் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ள சூழ்நிலையில், ஷிராணி பண்டாரநாயக்க ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.


நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் எதேச்சதிகாரமாகவும் தன்னிச்சையாகவும் குற்றவாளியாக்கப்பட்டாலும் நான் சட்டரீதியான முறைகள் மூலம் அதனை முகங்கொடுத்துள்ளேன் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. நான் நம்பிக்கை வைத்திருக்கின்ற இயற்கை நீதிக்கோட்பாடு மற்றும் சட்டரீதியான நடவடிக்கை முறைகள் தொடர்பில் நம்பிக்கை கொண்டு ஆரம்பம் முதல் அதனை நிலைநிறுத்தி உயர் நீதிமன்றங்களிலும் உறுதிசெய்தேன் என்று ஷிராணி கூறியுள்ளார்.

"குற்றச்சாட்டுக்கள் எல்லாம் படுபொய்கள்"

சபாநாயகர் அரசியலமைப்பை வியாக்கியானம் செய்வதற்கு தனிமையானதும் புறநீங்கலானதுமான நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் உயர்நீதிமன்றத்தின் கடந்த வியாக்கியானத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அதன் நடவடிக்கை முறைகள் யாவும் சட்டவிரோதமானது எனவும் அரசியலமைப்பிற்கு முரணானது எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம் உறுதிகேள் எழுத்தாணை மூலம் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டது. ஆகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம் எதுவித வலுவோ அதிகாரமோ அற்றதும் சட்டரீதியான நியாயாதிக்கமின்றி மேற்கொள்ளப்பட்டதென்ற அடிப்படையில் செல்லுபடியற்ற இரத்துச் செய்யப்பட்ட தீர்மானமாகும் என்று ஷிராணி பண்டாரநாயக்க தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த சூழ்நிலையில் ஓர் ஜனநாயக நாடான எனது நாடு இலங்கை சட்ட ஆட்சியை திறவுகோளாகக் கொண்டு உரிமைகளை நிலைநிறுத்துகின்ற ஓர் தேசம். அதில் நான்தான் இன்னும் சட்டரீதியாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் என்று இலங்கையின் 43 ஆவது தலைமை நீதியரசர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் என்ற பதவி மட்டுமல்ல நீதித்துறையின் சுதந்திரத்திற்கே பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்ட ஆட்சி, இயற்கை நீதி, நீதித்துறை சுதந்திரம் என்பன தூக்கியெறிப்பட்டிருக்கின்றன, காட்டுமிராண்டித்தனமாக சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன என்கிறார் ஷிராணி பண்டாரநாயக்க. எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான படுபொய்கள். குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலிருந்தும் நான குற்றமற்றவர் மட்டுமன்றி என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒரு சிறுதுளி உண்மைகூட இல்லை. மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஏதும் உண்மை தென்பட்டிருந்தால் நான் ஒரு கணம்கூட இந்த மகிமை மிகு பிரதம நீதியரசர் பதவியில் நீடித்திருந்திருக்கமாடடேன் என்று ஷிராணி பண்டாரநாயக்க ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சஜித் பிரேமதாஸா மீது கணை தொடுக்கிறார் ரணில்




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜீத் பிரேமதாஸா தொடர்பில் விசாரணை ஒன்றை மேற்கொள்ள கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார். கடந்த குற்றவியல் பிரேரணை விவாதத்தின் போது, கட்சியின் நாடாளுமன்றக் குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு முரணாக செயற்பட்டமை தொடர்பில் இந்த விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விவாதத்தில் கலந்து கொள்ளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயர்கள் பட்டியல் படுத்தப்பட்டிருந்தன. அதில் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸா ஆகியோரது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் சஜித் பிரேமதாஸா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு ஒதுக்கப்பட்டிந்த நேரத்தில், 15 நிமிடங்களைப் பெற்று நாடாளுமன்றத்தில் குற்றவியல் பிரேரணை தொடர்பில் உரையாற்றினார்.

இதனால் கட்சியின் பொதுத் தீர்மானத்துக்கு முரணாக செயற்பட்டமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகளை கருத்திற் கொண்டு, அவர் மீதான விசாரணையை



மேற்கொள்ள கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதற்கிடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி கட்சியின் செயற்குழுவினால் நியமிக்கப்படவிருந்த 2013 ஆம் ஆண்டுக்கான பிரதித் தலைவர், துணைத்தலைவர் மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிகளுக்கான நியமனங்கள் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாஸ, ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தயா கமகே ஆகியோர் இந்தப் பதவிகளை வகித்திருந்த போதும், அவை கடந்த 8 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## எண்ணெய் கசிவு

கொலனாவையில் இருந்து கொழும்புத் துறைமுகம் வரையிலுள்ள இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் பரிமாற்றுக் குழாயில் இரண்டு இடங்கில் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீதொட்டுமுல்லை, ஒரு கொடவத்தை கம்பிகொட்டுவத்தை மற்றும் பாலத்துறை, நாகலந்த வீதி - பப்படம்வத்த ஆகிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் இந்த எண்ணெய் கசிவுகள் ஏற்பட்டுள்ளன.

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களை எதிர்வரும் 19 ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

ஏலவிற்பனை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவான பணத்தினை மட்டும் கொடுக்கவேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

# இரண்டாவது ஒருநாள் போட்டியில் 127 ஓட்டங்களால் இந்தியா வெற்றி



(கொச்சி)

கொச்சியில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 158 ஓட்டங்களுக்கு சுருண்டு 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இந்திய அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. அசோக் டின்டாவுக்கு பதில் சமி அகமட் சேர்க்கப்பட்டார். இங்கிலாந்து அணியில் பிரெஸ்னென் காயத்தால் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக கிறிஸ்வோக்ஸ் இடம்பெற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 285 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டோனி 72, ரெய்னா 55, ஹோலி 37, யுவராஜ்சிங் 32, ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களைப் பெற்றனர்.

இங்கிலாந்து அணி தரப்பில் பின், டென்பெர்க் தலா 2 விக்கெட்டுகளும், வோக்ஸ், ட்ரெட்வெல் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

வெற்றி பெற 286 ரன்கள் என்ற இலக்கை எதிர்கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து முதல் ஓவரிலேயே சமி அகமடின் அவுட் ஸ்விங்கருக்கு பெல்லின் விக்கெட்டை இழந்து அதிர்ச்சித் துவக்கம் கண்டது.

அதன் பின்பு தொடர்ச்சியாக விக்கெட்டுக்கள் வீழ்ந்த வண்ணமிருந்தன. பீற்றர்சன் மட்டும் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் புவனேஷ்குமார், அஸ்வின் தலா 3, ஜடேஜா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். சமி அகமட் 24 ரன்கள் கொடுத்து முக்கியமான பெல்லின் விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்ட நாயகனாக ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் தற்போது 1 - 1 என்று சமநிலையில் உள்ளது. இந்தத் தோல்வி மூலம் இந்தியாவில் இங்கிலாந்து விளையாடிய கடைசி 20 ஒருநாள் போட்டிகளில் 16 ஆவது போட்டியில் தோற்றுள்ளது. அடுத்த போட்டி ராஞ்சியில் நடைபெறவுள்ளது.

முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தலைமைத்துவப் பயிற்சி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் இன்று ஆரம்பமாகின்றன. இரண்டாம் கட்டமாக இந்தப் பயிற்சி வழங்கல்கள் இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட 22 மத்திய நிலையங்களில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கு 7 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் முதலாம் கட்டமாக நடைபெற்ற மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகளுக்கு 90 சதவீதமான மாணவர்கள் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாலியல் துஷ்பிரயோகம் பௌத்த பிக்கு கைது

திருகோணமலை மொரவெள எட்டாபெந்தியோவ பகுதியில் ஆறு வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பௌத்த பிக்கு ஒருவர் நேற்று திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டார்.

அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிபதி சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட குறித்த சிறுவன் தற்போது சத்திரசிகிச்சைக்குப் பின்னர், திருகோணமலை வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒத்திவைக்கப்பட்ட சிறை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிசானா நபீக்கின் போலி பிறப்பு அத்தாட்சி பத்திரத்தை தயாரிக்க உதவியதாகக் கூறப்படும் சந்தேகநபருக்கு மேல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்த சிறையும் தண்டமும் விதித்தது.

தலைமறைவாகி இருந்த சந்தேகநபரான தம்பிலெப்பை அப்துல் சலாம், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு ஏனைய இரண்டு சந்தேகநபர்களுடனும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

ரிசானா நபீக்கை வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய வயதுடன் கட வுச்சீட்டு பெறுவதற்கு போலியான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை தயாரித்த சந்தேகநபர்களான தம்பிலெப்பை அப்துல் சலாம், பக்கீர் மொஹம்மட் வஜுர்தீன் மற்றும் சாஹுல் ஹமீட் அப்துல் லத்தீப் ஆகியோருக்கு எதிராக மேல் நீமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தம்பிலெப்பை அப்துல் சலாம தான் குற்றமற்றவர் என நீதிமன்றில் கூறியபோதும் ஏனைய இருவரும் குற்றங்களை ஒப்புக் கொண்டதால் இவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தலைமறைவாகிய தம்பிலெப்பை அப்துல் சலாமை புலனாய்வு பொலிஸார் பேருவளையில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இவரை வழக்கு விசாரணைகள் முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

விசாரணையின் பின் இவருக்கு ஐந்து வருட ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனையும் 5,000 ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டது.

# யாழில் கையெழுத்து வேட்டை; விபரீதமாக முடிவடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பேருந்து நிலையப் பகுதியில் நேற்று முற்பகல் தென்பகுதியைத் தளமாகக் கொண்ட சமஉரிமை இயக்கம் மேற்கொண்ட கையெழுத்துப் போராட்டத்தின் போது இனந்தெரியாதவர்களால் கழிவு எண்ணெய் வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு தென்பகுதியிலிருந்து வருகை தந்திருந்த சமஉரிமை இயக்கம் யாழ். மத்திய பேருந்து நிலையத்தின் பெட்டிக்கடைகள் அமைந்துள்ள பகுதியில் இந்த கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தது.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்ட வலியுறுத்தியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தியும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் மேலும் இதர கோரிக்கைகளை முன்வைத்தும் அந்த இயக்கம் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தது.

இத்தகைய பல்வேறு கோஷங்கள் எழுதப்பட்ட பதாகையை இந்தப் போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்தவாறு அதில் மக்களது கையெழுத்துக்களை பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் காலை 10.45 மணியளவில் அந்தப் பகுதிக்கு வந்த இனந்தெரியாதவர்கள் போராட்டக்காரர்கள் பிடித்திருந்த பதாகையின் முன்பாக நிலத்தில் கழிவு எண்ணெயை வீசிச்சென்றனர்.

இதன்போது பொலித்தின் பைகளில் எடுத்துவரப்பட்டு வீசப்பட்ட கழிவு எண்ணெய் வீச்சின் போது சில ஊடகவியலாளர்களுக்கும் கழிவு எண்ணெய் பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## கண்காட்சி ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக தேசத்திற்கு மகுடம் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ரஞ்சித் சியம்பிலாப்பிட்டிய தெரிவித்தார்.

பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, மார்ச் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சம்பந்தன் கொழும்பு திரும்புகிறார்

கண் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இன்று நாடு திரும்பவுள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த இரண்டு மாதங்களாக தமிழ்நாட்டில் தங்கியுள்ளார். அங்கு அவருக்கு இரண்டு கண்களிலும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது குணமடைந்துள்ள அவர், இன்று கொழும்பு திரும்பவுள்ளதாகவும், வரும் வெள்ளிக்கிழமை திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலய புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வோஷிங்டனுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்த நிலையில், இரா. சம்பந்தன் கொழும்பு திரும்பியதும், அந்தப் பயணத்துக்கான ஒழுங்குகள் தீர்மானிக்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.